241

உ
சிவமயம்
திருச்செந்திலாண்டவன் துணை





| மலர் 27 | நள ஸ்ரீ குருபூஜை இதழ் 1௨ [14—5—76] | இதழ் 5 |
| --- | --- | --- |


நமச்சிவாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சிவாயவே நானறி விச்சையும்
நமச்சிவாயவே நாநாவின் றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே.

திருச்சிற்றம்பலம்

# திருவியலூர் உய்ய வந்த தேவநாயனார்

அருளிய

# திருவுந்தியார்—உரைவிளக்கம்


சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர் பாலகவி
திரு. வே இராமநாதன் செட்டியார் அவர்கள்,
தேவகோட்டை



(மலர் 27 இதழ்-4 பக்கம் 196-ன் தொடர்ச்சி)


சொல்லும் இடமன்று சொல்லப் புகுமிடம்
எல்லை சிவனுக் கென் றுந்தீபற
என்றால் நாம் என்செய்தோம் உந்தீபற.

ஞான நிட்டையில் தோன்றும் சிவத்துக்கு எல்லையாகச் சொல்லப்புகும் இடம், ஆன்ம போதத்தால் அறிந்து சொல்லக் கூடிய இடமன்று. இதனை அருள் நூல்கள் கூறுகின்றன வென்றால், இது பற்றி நாம் என்ன செய்யலாம்?

உயிர்கள் முத்திபடைவதற்குச் சாதனமாயிருப்பது ஞானம் இது முன்னைத் தவமுதிர்ச்சியினால் வந்து கூடுவது. "ஞானம் என்றது, குரவன் உணர்த்தியவாறு சிவஞானங் கண்ணுகைக் கொண்டு அறிவதாகிய அறிவினை" என்று, ஞானத்துக்கு விளக்கம் கூறும் சிவஞான பாடியம் ஞானத்தை நன்னெறி என்று சிறப்பித்துக் கூறுவர் மெய்கண்ட தேவர். நன்மை எனப்படுவன எல்லாவற்றுள்ளும் சிறந்த நன்மை எனப்படும் வீடு பேற்றைத் தலைப்படுதற்கு ஏதுவாய்ச் சிறந்த நெறியாகலின் 'ஞானம்' நன்னெறியெனப்பட்டது.

வீடுபேற்றைக் காதலிப்போர் முதற்கண், புறச்சமய நெறி நின்றும், அகச்சமயம் புக்கும், புகல் மிருதி வழி உழன்றும், புகலும் ஆச்சிரம அறத்துறைகளவை அடைந்தும், அருந்தவங்கள் புரிந்தும், அருங்கலைகள் பல தெரிந்தும், ஆரணங்கள் படித்தும், சிறப்புடைய புராணங்கள் உணர்ந்தும், வேத சிரப்பொருளை மிகத் தெளிந்தும் சென்றால் சைவத் திறந்தடைவர். இதில் சரியை கிரியாயோகம் செலுத்தியபின் ஞானத்தால் சிவனடியைச் சேர்வர். என்று சிவஞானசித்தியார் அறிவிக்கின்றது. இங்கே கூறப்பெற்ற 'புறச்சமயநெறி நிற்றல்' முதலாயினவும், சிவனடியைச் சேருதற்குப் படி முறையில் சாதனங்களாயிருந்து துணை புரிவதனாலேயே, 'பந்தமும் பிரிவும் தெரிபொருட் பனுவல்படி வழி சென்று சென்றேறி' என்று கருவூர்த்தேவர் தமது திருவிசைப்பாவில் அருளிச்செய்கின்றார்.

சைவ நெறியைச் சாரும் தவம் கைகூடப் பெற்றோர், ஞானாசிரியன் காட்டும் சைவாகம நெறியில் சமய தீக்கை பெற்றுச் சரியை நெறியைத் தலைப்பட்டு, அது முற்றிய பின்னர் விசேட தீக்கை பெற்றுக் கிரியை நெறியைத் தலைப்பட்டு அது முற்றிய பின்னர் யோக நூல் கேட்டு யோக நெறியைத் தலைப்பட்டு, இம்மூன்றும் முறையான் முற்றிய பின்னர் நிரு

வாண தீக்கை பெற்று ஞானநெறியைத் தலைப்பட்டு வீடுபேற டைவர். ஞானம் கேட்டலும், சிந்தித்தலும், தெளிதலும் நிட்டை கூடலும் என நான்கு வகைப்பட்டு வீடு பேற்றை அளிக்கும்.

கேட்டலாகிய ஞானம், சூரிய காந்தக் கல்லினிடத்துச் சூரியனது சந்நிதி மாத்திரையானே நெருப்பு விளங்கித் தோன்றுவது போல, ஞான சாத்திரப் பொருளை உபதேசக் கிரமத்தினாலே பெற்றுச் சொல்லும் தகுதியுடன் விளங்கும் ஞானசிரியனது சந்நிதி மாத்திரையானே சீடனது அறிவு விளங்கித் தோன்ற, முப்பொருளுண்மையும், பதி உயிர்க்குயிராய் அணுவோரண்டமாம்படி சிறிதாகவும் அண்டமோரணுவாம்படி பெரிதாகவும் நின்ற நிலையும் விளங்கச் செய்யும்.

சிந்தித்தலாகிய ஞானம், கேட்ட பொருளைச் சிந்திக்கும்படி ஞானசிரியர் சொல்லக்கேட்டு அப்பொருளினிடத்து மனம் ஒருப்பட்டுச் சிந்தித்து நிட்டை கூடுதலில் ஆசை உடையராகச்செய்யும். அவ்வாசை வந்தால், விருப்பு வெறுப்பின்றி ஓட்டையும் செம்பொன்னையும் ஒக்கநோக்கி, வேறொன்றிலும் பற்றின்றிப் பேரறிவாகிய சிவமும் சிற்றறிவாகிய நானும் கதிரவனொளியும் கண்ணொளியும் போல் அத்துவிதமாய் கலந்து நிற்றலால், தானொரு பொருள் உண்டென்று அறியப்படாது சிவத்தோற்றம் ஒன்றே காணப்பெறும்.

தெளிதலாகிய ஞானம், ஞானசிரியனது நல்லருளினால் எதையும் அறியாமையாகிய கேவலமும், உலகத்தை அறிதலாகிய சகலமும் நீங்கப்பெற்று, முதல்வனை அறியும் முறையைத் தன்னறிவின் கண்ணே கேட்டுச் சிந்தித்துச் சிந்திக்கப்பட்ட பொருளினிடத்து அன்பு வைத்து அந்தக் கரணங்களிற் சேராது அடங்கி நிற்கச் செய்யும். அப்போது தம்முடன் பிரிதலில்லாத முதல்வனது இயல்பு, கேட்டபொழுது பொருட்டன்மை பற்றி வேறாய்த்தோன்றி, சிந்தித்த பொழுது கலப்புப் பற்றி ஒன்றாய்த் தோன்றியது, அவ்விரு தன்மையும் இன்றி உடனாய் நிற்பது தோன்றப்பெறும்.

கேட்டுச் சிந்தித்துத்தெளிந்து நிட்டை கூடிய சீவன் முத்தர்கள் அந்தக் கரணங்களின் வயப்படாமல், சிவ வியாபகத்திற் கலந்து, 'சூரியன் எங்கேஉதயமாயினும் எங்களுக்கென்ன' என்று எந்தக் குறையும் இல்லாதவராய், உடம்பு நீங்கிய பரமுத்தி நிலையில் வியாபக அறிவு விளங்கப்பெற்றுச் சிவத்தோடு ஒத்து நிற்பார்கள்.

இவ்வாறு ஞான நிட்டையில் உணரப்படுவதாகிய சிவத்தின் எல்லை, ஆன்ம போதத்தால் ஒரு காலமும் உணர முடியாததாகும். அந்த எல்லை, வாக்கிறந்ததாதலின், அது சொல்லும் இடமன்று ஆன்ம போதம் நீங்கப்பெற்றுத் திருவருளில் அழுந்திச் சிவபோதம் கூடி நிற்பவர்களுக்குத் தம்மனுபவம் என்று ஒன்றே; அதனைச் சொல்லுவதோ அமையமாட்டாது. சிவ வெளிப்பாடு கூடிய ஆன்மாவுக்கு யான்என்றும் எனதென்றும் எண்ணுகின்ற எண்ணமே இராது. ஆதலால் அதன் அநுபவ இடம் சொல்லுகிற எல்லையில் நிற்பதில்லை. 'கண்டவர் விண்டிலர்', 'விண்டவர் கண்டிலர்' என்னும் பழமொழி இங்கே நினைவு கூர்தற்குரியது.

(தொடரும்)

# "பந்தபாசம் அறுக்கும் வழி"

ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்,
இளவரசு, மதுரை ஆதீனம்.

அப்பூதி அடிகள் அந்தணராக இருந்த போதிலும், வேளாளர் மரபில் உதித்த திருநாவுக்கரசருடைய திருவருட் பெருமையை உணர்ந்த மாத்திரத்தில், அவர் மீது அன்பு பூண்டு, அவரையே குருநாதராகவும் கொண்டு விட்டார். அதுமட்டுமா? தன் வீட்டில் உள்ள எல்லோரையும் திருநாவுக் கரசராகவே பாவித்து, வீட்டார் அனைவருக்கும், வீட்டுச் சாமன்கள் அனைத்திற்கும், தான் நிறுவிய தண்ணீர்ப்பந்தலுக் கும் திருநாவுக்கரசருடைய பெயரையே வைத்து வணங்கி மகிழ்ந்தார்

அவர் எல்லாப் பற்றுக்களையும் விட்டு விட்டு, பற்றை யெல்லாம் விட்டுத் திகழ்ந்த திருநாவுக்கரசர் மீது தனதுபற்று முழுவதையும் செலுத்திக் கொண்டு வந்தார். இதைத்தான்; திருவள்ளுவர்,

''பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு''

என்று அருளியிருக்கிறார். நாம், நம்மிடத்தில் உள்ள வேண் டாத பற்றுக்களையெல்லாம் விடவேண்டுமானால், அப்பற்றுக்க ளெல்லாம் அறவே இல்லாத இறைவனது பற்றினைப் பற்ற வேண்டும். அப்படிப் பற்றியவர்கள்தான் நமது நாயன்மார்க ளெல்லாம்.

ஒரு நாமம், ஒருருவம் ஒன்றும் இல்லாத இறைவனை எந்த நாமம் கொண்டும் பற்றலாம். அந்நாமத்தை எப்பொழு

தும் தன் உள்ளத்திலும், நாவிலும் கொண்டிருந்தால், அது மற்ற அனுவசியமான எண்ணங்களை, எண்ணவொட்டாமல் தடுத்து, அவற்றின் மீது கொண்டிருக்கும் பற்றுக்களை அறவே நீங்கும்படி செய்யும். அதற்கு அப்பூதி அடிகளே, சிறந்த சான்ருக விளங்குகிருர். சிவன் அடியாராகிய நாவுக்கரசுப் பெருமானது நாமத்தையே பற்றிக் கிடந்த அவர், தனது மூத்த மகன் இறந்துகிடந்த நிலையிலும் அவன் மீது யாதொரு பற்றுமின்றி, நாவுக்கரசருக்கு அமுது படைக்கத் தாமதமாகி விடுமோ என்ற ஒன்றிலேயே கருத்துக் கொண்டு இருந்த காரணத்தினுல் தனது குழந்தை இறந்ததனுல் ஏற்படும் துன்பம் அவரைப் பாதிக்கவில்லை அல்லவா?

குழந்தைகள் மீது நமக்கு எப்பொழுதும் பற்று மிகுந் திருப்பதை அனுபவத்தில் காணலாம். அதிலும், பெண்கள் தனது சிறு குழந்தை ஒன்று இறந்து விட்டாலும், அதையே பெரிதாகக் கருதி; அழுது, புரண்டு, விழுந்து மிகுந்த கவலைப் படுவார்கள். ஆனுல் மற்றவர்களின் குழந்தைகள் இறந்தால், அவ்வாறு செய்வதில்லையே? அவர்கள் மீது பற்று இல்லாத தால் அத்துன்பம் ஏற்படவில்லை.

ஆக, நமது உள்ளங்களின் நிலை வேருக இருக்கிறது இன்பத்தையும், துன்பத்தையும் சமமாகக் கருதிய அப்பூதி அடிகளது உள்ளத்தின் நிலை வேருக இருக்கிறது அவர், செயற்கரிய செய்த பெரியார். நாம் செயற்கரிய செய்ய முடி யாத சிறியர். அதனுல்தான், அவரை இன்று நாம், நமது நாயன்மார்களில் ஒருவராகக் கொண்டு வணங்குகிறேம் அவர் இருவினையொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம், இவைகள் கைவரப் பெற்றவர்.

இருவினையொப்பு என்பது, பாவ, புண்ணியம் எனப் படும் இருவினைகளுமே பாதிக்காமல் இன்பத்திலும், துன்பத் திலும் விருப்போ, அல்லது வெறுப்போ இல்லாமல் இருக்கும் நிலையாகும் இந்த நிலையை அடைந்தவர்கள், ஆணவமலத் தடிப்பு ஒன்றும் இன்றி, எது நடந்தாலும் ஆண்டவனது செயல் என்று கருதி யான, எனது என்னும் செறுக்கற்று

இருப்பார்கள் இந்த நிலையே மலபரிபாகம் எனப்படும் இறுதியாக, இறைவனின் திருவருள் சக்தி முழுவதையும், தன்னிடத்தில் பதியப் பெற்று, சத்தினி பாதத் தன்மையையும், ஜீவன் முத்தர் நிலையையும் அடையப் பெறுவது.

பொதுவாக, நாம் யாரை குருநாதராகக் கொள்கிறோமோ அவர்கள் மூலமே, ஆண்டவன் நமக்கு அருள் புரிகிறார். இறந்து போன மூத்த மகனைப் பற்றிப் பெற்றோர்கள் கவலைப்படாமலிருக்க, இறைவன் தானே வந்து, நாவுக்கரசரைத் தேவாரம் பாடும்படிச் செய்து, இறந்த மகனை எழுப்பி, உயிர்ப்பித்துக் கொடுக்கவில்லையா?

அடுத்து, நமது அப்பூதி அடிகள், தான் ஒரு அந்தணர் என்ற இறுமாப்புக் கொள்ளவில்லை. அவரைப் போல் நாமும் இருக்கப் பழக வேண்டும். நமது வீடுகளிலே, பலவிதமான தூய்மையற்ற உயிர்ப் பிராணிகளெல்லாம் வசித்திருக்க, மனிதர்களை, அந்த உயிர்ப் பிராணிகளைவிடக் கீழான முறையில் பேசக் கூடாது. மனிதர்களை மனிதர்களாகக் கொள்ள வேண்டும். ஆண்டவன் முன் நாம் எல்லோரும் சமமே நாம் அனைவரும், ஆண்டவனது குழந்தைகள். சகோதர சகோதரிகள் என்ற உணர்வுதான் வரவேண்டும்.

எனவே, எல்லோரிடத்திலும் அந்தஅன்புபூணவேண்டும் அதிலும், சிவபெருமானது அடியார்களாகிய நாயன்மார்களிடத்தில், விசேஷ அன்பு பூண்டு. அவர்களைப் போல், நாமும் ஒழுகி வந்தால், அவர்கள் பெற்ற பேற்றினை நாமும் பெற்றிடலாம். பற்றற்ற முறையில் வாழ்ந்திடலாம். வேண்டாத காரியங்களுக்கெல்லாம் ஏங்கி கவலைப்படுதல் கூடாது.

எத்தகைய துன்பம் வந்திடினும், அதனை எதிர்த்துநிற்கப் பழகிட வேண்டும். எல்லோருடைய வீட்டிலும் இறப்பு என்பது உண்டுதானே? எப்படிக் கால்பந்து நம்மை நோக்கி வரும்பொழுது. அதைத் தலையாலோ, காலாலோ உதைத்துத் தள்ளுகிறோமோ, அதே போல, துன்பம் வந்தவிடத்தும் அதனை எதிர்த்து நின்று, துன்பத்தைத் துச்சமாகக் கருதி தைரியமாக,

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

# மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்

செல்வி: த. பத்மாவதி அவர்கள்,
மதுரை ஆதீன சிஷ்யை,
54, ஜடாமுனி கோவில் மேலச்சந்து, மதுரை.

உலகில் ஒவ்வொரு மனிதரின் சுபாவமும் ஒவ்வொரு விதமாகவே இருக்கிறது ஆனால் இன்பமான வாழ்வு வாழவேண்டும் என்றுதான் எல்லோருமே கருதுகின்றனர் எல்லாத் தோத்திரங்களும், எல்லாச் சாத்திரங்களும் மக்கள் நல்வாழ்வு வாழும் வழிகளையே போதிக்கின்றன. சிவஞானம் பெற்ற ஞானசம்பந்த பெருமான், கருணையோடு நல்வாழ்வு வாழ்வதற்குரிய வழியைக் கீழ்க்கண்டவாறு அருளியிருக்கின்றார்.

**மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்**
**எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவிலைக்**
**கண்ணினல் லஃதுறும் கழுமல வளநகர்ப்**
**பெண்ணி னல்லா ளொடும் பெருந்தகை இருந்ததே.**

எல்லோரும் நல்வாழ்வு வாழ்வதற்கு வழிவகுக்கும் மூலப் பொருள், பெருந்தகை எனப்பெறும் சிவபெருமானேயாவார்.

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

அதனை உதைத்துத் தள்ளி வாழ வேண்டும். கேட்டவற்றையெல்லாம், படித்தவற்றையெல்லாம் நன்றாகச் சிந்தித்துத் தெளிந்து, தெளிந்த வண்ணம் செயல் பட்டிட வேண்டும்.

நமது அப்பூதி அடிகளினுடைய உள்ள உரம் நம் எல்லோருக்கும் ஏற்படுமேயானால் பந்தபாசம் அறுத்து, பற்றற்று வாழலாம். பேரின்பத்தைப் பெறலாம் அதனாலேயே, நமது ஞானசம்பந்தப் பெருமான்,

*''நந்தி நாமம் நமச்சிவாய எனுஞ்*
*சந்தையால் தமிழ் ஞானசம்பந்தன் சொல்*
*சிந்தையால் மகிழ்ந்து ஏத்தவல்லா ரெல்லாம்*
*பந்தபாசம் அறுக்க வல்லார்களே''*

என்று அருளியிருக்கிறார்.

ஓம் சிவாய நம:

ஏன் சிவபெருமானைப் பெருந்தகை என்ற சொல்லால் சொன்னார் ஞானசம்பந்தர்? பெருந்தகைமை உடைய ஒருவர் தன்னுடைய வாழ்வையே பிறருடைய நல்வாழ்விற்காகவே அமைத்துக் கொள்வார். அதனாலேயே திருவள்ளுவரும்,

> "மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
> பெருந்தகை யான்கண் படின்"

என்றார், மருந்துக்குரிய மரமானது வேரிலிருந்து இலை, பட்டை காய், கனி, அனைத்தையும் பிறருடைய நன்மைக்காகவே அர்ப்பணித்து நிற்கிறது. அவ்வாறு மருந்துக்கு உதவும் மரங்கள் போன்ற மனிதர்களும் உலகில் உண்டு. அவர்களே தெய்வத்தோடு ஒப்ப நோக்கக் கூடிய பெருந்தகைமை உடையவர்கள் உலகிலேயே தனக்குவமை இல்லாத இறைவனே பெருந்தகையாளர்க்கெல்லாம் தலைமையான பெருந்தகையான். எனவே இறைவனையே பெருந்தகை என்ற சொல்லால் திருஞானசம்பந்தப் பெருமான் குறிப்பிடுகின்றார். அவரே உலகுயிரினங்கள் அனைத்திற்கும் நல்வாழ்வு அளிக்கும் ஆற்றலும் அதிகாரமும் உடையவர்.

அடுத்தபடியாக ஞானசம்பந்தப் பெருமானுடைய திருவாக்கிலே அப்படிப்பட்ட பெருந்தகையாகிய இறைவன் தனியாக இருக்கவில்லை. பெண்ணினல்லவளாகிய உமையம்மையுடனேயே இருந்த கருணையைப் 'பெண்ணினல்லாளொடும் பெருந்தகை இருந்ததே': என்ற சொல்லால் குறிப்பிடுகின்றார்.

சிவமெனும் பொருளும் ஆதி சத்தியோடு சேரின் எத்தொழிலும் வல்லதாம்.

அவள் பிரிந்திடின் இயங்குதற்கும் அரிது அரிதாமென மறை இசைக்குமால் மேலும் துஷ்ட நிக்ரகம் செய்கின்ற காலத்திலேயே இறைவன் தனித்துச் செல்கின்றார் சிஷ்ட பரிபாலனம் செய்யுங் காலத்தில் இறைவன் இறைவியுடன் இயைந்தே செல்வதைப் புராண இதிகாசங்களில் காணுகின்றோம், உதாரணமாக சூரசம்ஹாரத்திற்குப் பிறகே தெய்வயானையம்மை திருமணம், சீதையைப் பிரிந்த பிறகே இராவண சம்ஹாரம், காமனைத் தகனம் செய்த பிறகே பார்வதி கல்

யாணம் இன்னும் பல. எனவே உமையம்மையுடன்வீற்றிருந்து பெருமான், நாமெல்லாம் மண்ணில் நல்ல வண்ணம் வாழ வழி காட்டிக் கொண்டிருக்கிறார்.

உமையம்மையை ஞானசம்பந்தப் பெருமான் பெண்ணில் நல்லாள் என்று குறிப்பிடுகிறார். இதற்குக் காரணம் சேக்கிழார் பெருமான் தனது பெரிய புராணத்திலே விளக்கியருளுகின்றார். அது வருமாறு.

எண்ணிலாகமம் இயம்பிய இறைவர் தாம் விரும்பும்
உண்மையாவது பூசனை என உரைத்தருள
அண்ணலார்தமை அருச்சனை புரிய ஆதரித்தாள்
பெண்ணினல்லவ ளாயின பெருந்தவக் கொழுந்து.

இறைவனைப் பூசித்த காரணத்தால் இறைவி பெண்களிலே நல்லவள் ஆகிறாள். ஒவ்வொரு பெண்ணும் தனது கணவனைத் தெய்வமாகக் கொண்டு பூசித்தால் அவளை விடத் தவக் கொழுந்து வேறு யாரும் இருக்க முடியாது இதனையே திருவள்ளுவரும்

'தெய்வம் தொழாள் கொழுனன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை''

என்றார். எல்லா உயிர்களுக்கும் நாயகன் சிவபெருமானே யாவார். எனவே நாயகனாகிய இறைவனை எல்லோரும் பூசனை செய்யவேண்டும் என்பதை இறைவி செய்து காட்டுகிறாள். இறைவன் பிராட்டியோடு கழுமல வளநகர் என்று சொல்லப் பெறும் சீகாழிப்பதியில் வீற்றிருக்கிற நிலையைத் தினமும் அதிகாலையில் தொழுகின்றவர் எண்ணுகின்ற அத்தனை காரியங்களும் யாதொரு குறையுமின்றி நிறைவு பெறும் என்பதுநமது ஞானசம்பந்தப் பெருமானது உறுதிவாக்காகும். அவரது வைகலும் எண்ணில் என்ற திருவாக்கிலிருந்து அப்படித் தினமும் காலையிலும், சதாவும் இறைவனை எண்ணுவது சாதாரண மானவர்களுக்கு அரிது என்பது புலனாகிறது.

இறைவனிடம் கருணைமனு, கட்டாயமனுப் போட்டு நல்வாழ்வைப் பெருக்கிக் கொள்ள, வல்லமையும், அறிவும் வேண்டும், அதனாலேயே 'அறிவாலறிந்து உன் இருதாளி

றைஞ்சும் அடியாரிடைஞ்சல் களைவோனே'' என்று அருணகிரிநாதப் பெருமான் அருளுகின்றார். நாம் எத்தகைய தீவினை செய்திருந்தாலும் இறைவனிடம் மன்னிப்புக்கேட்டுத் திருந்தி தீவினைக்குரிய பாவத்தைப் போக்கி அதனால் வரும் துன்ப வாழ்வை மாற்றி இன்பவாழ்வு பெறலாம் என்பதையே ஞானசம்பந்தப் பெருமான்,

''அவ்வினைக் கிவ்வினையாம் என்று சொல்லுமஃதறிவீர்
உய்வினை நாடாதிருப்பதும் உந்தமக் கூனமன்றே
கைவினை செய்தெம்பிரான் கழல் போற்றுதும் நாமடியோம்
செய்வினை வந்தெம்மைத் தீண்டப் பெருதிரு நீலகண்டம்

என்றும்,

கொல்வாரேனும் குணம்பல நன்மைகள்
இல்லாரேனும் இயம்புவராயிடின்
எல்லாத் தீங்கையும் நீங்குவ ரென்பரால்
நல்லார் நாமம் நமச்சிவாயவே

என்றும் தனது தேவாரங்களில் வலியுறுத்துகின்றார்.

நரகம் ஏழ்புக நாடினராயினும்
உரை செய்வாயினராயின் உருத்திரர்
விரவியே புகுவித்திடும் என்பரால்
வரதன் நாமம் நமச்சிவாயவே.

———

ஆறுபடை வீடுகளிடத்தும், பிற இடங்களிலும் நிலை பெற்றுள்ள முருகனை நீ நாடிச் செல்வாயாயின் உன் கருத்து ஈடேறும்; உலகிலே ஒப்பற்று விளங்கும் தகுதியுடையவனுக முருகனின் அருள்பெறுவாய் என்னும் பொருள் அமைதி கொண்டு திருமுருகாற்றுப்படை முற்றுப் பெறுகின்றது.

இவ்வாறு உலகம் உவப்ப என்று கடலில் ஆரம்பித்து பாண்டிய நாட்டின் சூரியகதி போல மலையில் முடித்து விட்டார் அல்லது கடலில் ஆரம்பித்து அருவியில் முடித்து விட்டார் என்ருலும் பொருந்தும், அதாவது சமஷ்டியில் ஆரம்பித்து வியஷ்டியில் முடித்தார் என்க.

ஆன்மாக்களின் பரிபக்குவ நிலைக்கேற்ப அவரவர்கள் அடையக் கூடிய நிலைமையில் இறைவனைக் கவிஞன் கவியில் கனிந்த முருகனுகவும், ஆரணம் கண்ட ஆகமப் பொருளாகவும், மூவர்க்கும் முதல்வஞன சுத்த சைதன்யமாயும், அந்தணர் கண்ட மந்திர முருகனுயும், கானவர் கண்ட வேடுவ முருகனுயும், ஆர்வலர், எவரும் எங்கணும் காணும் ஸௌலப்ய சீலனுயும் சித்தரித்தார் முதல் படையில் ப்ரக்ருதி புருஷன் என்ற ஸாங்கிய சித்தாந்தமும், இரண்டாவதில் சித்தாந்த முடிவாயும் மூன்ருவதில் வேதாந்த முடிவாயும், நான்காவதில் மந்திரப் பொருளாயும், ஐந்தாவதில் திருங்காளரஸ சம்பூரணனுயும், ஆருவதில் ஆர்வலர் ஏத்தும் அடியார்க்கு எளியனுயும், காட்சிதருவதாக நக்கீரர் சித்தரித்தார் முதலில் சாங்கியயோகமும், இரண்டாவதில் யோக மார்க்கமும், மூன்ருவதில் ஞான மார்க்கமும், நான்காவதில் உபாஸன மார்க்கமும், ஐந்தாவதில் சரியா மார்க்கமும், ஆருவதில் கிரியா மார்க்கமும் காட்டப்பட்டது மற்றும் நக்கீரர் கூறும் ஆறுபடை வீடுகள் நாம் பார்க்கும் திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழனி, சுவாமிமலை, குன்றுதோருடல், பழமுதிர்சோலை போன்ற ஊர்களல்ல என சிலஆன்ருேர்கள் கூறுகின்றனர். அதாவது நமது உடம்பிலே அமைந்திருக்கும் மூலாதாரம், ஸ்வாதிட்டானம், மணிபூரகம், அனுதகம், விசுத்தி, ஆக்ஞை என்ற ஆதார ஸ்தானங்களாகும். குண்டலி என்னும் சக்தி இவ்வாறு ஆதா

ரங்களைப் பேதித்துக் கொண்டு சுஷும்ன நாடி வழியாகச் செல்லுங்கால் ஒவ்வொரு ஆதாரங்களிலும் ஏற்படும் அனுப வங்களே ஆங்காங்கு முருகனைக் கூறப்படுகின்றது. திருப் பரங்கிரிப் பதிகம் ஐந்தினை நிலங்களையும் கூறுவதுடன், அந் தந்த நிலங்களின் அதிதேவதை முருகனே என்பதால் அதுப் ருத்விதத்துவமான மூலாதாரமாகும். திருச்சீரலைவாய்ப்பதி கம் ஆறுமுகங்களை பன்னிரண்டு புஜங்களையும் வர்ணித்து, பஞ்ச கிருத்தியங்களையும் செய்து எஞ்சியிருப்பவன் முருகனே அது ஷட்கோணம் கொண்ட அனுதகமாகும். திருவாவினன் குடி ஆக்ஞாவாகும். தேவரும் மூவரும் முருகனுடைய ஆணையை எதிர்பார்த்து தூதுகோஷ்டிசெல்கின்றனர். யோக சாஸ்திரப்படி குண்டலினி ஆக்ஞையை அடைந்தவுடன், அங்கு தங்காமல்சஹஸ்ராரத்திற்குச்சென்றுவிடுமாதலால், அப் பதிகத்தின் இறுதியில், சில்நான் அசைதலும் உரியன் என் றிருப்பது இதனை வலியுறுத்தும். திருவேரகப்பதிகத்தில் ''முத்தீச் செல்வம்'' என்று மந்திரரோபாஸனையை சொல்லு வதால் அது அக்னி தத்துவமான மணிபூரத்தைக் குறிக்கும். குன்றுதோருடல் பகுதியில் 16 இதழ் கமலமாகிற விசுத்தி கூறப்பட்டிருக்கிறது. ஆதாரங்களின் இதழ்களுக்கு வரை கள் என்று பெயர் உண்டு. விசுத்தியில் வைகரீ வாக்கு உண் டாகின்றன. அதாவது அங்குதான் ஓசையும் ஒலியும் உண் டாகின்றது. ''தொண்டகச் சிறுபறை குரவை அயர'' என் றும், ''நரம்பார்த்தன்ன இன்குரல்தொகுதி'' என்று அப்பகுதி யில் கூறியுள்ளார் பழமுதிர்சோலையே அப்புஸ்தானமான பழமுதிர்சோலை அது விஷ்ணுவின் ஸ்தானம். நக்கீரர் காலத் திற்கும் முன்பான பரிபாடலில் திருமாலிருஞ் சோலையென்று வழங்கப்பட்டிருக்கின்றது. சிலம்பாற்று அருவியை வர்ணித் திருப்பதால் அப்புதத்துவம் குறிக்கப்பட்டிருக்கிறது. ஆதார வரிசையில் கூறப்படவில்லை யென்று கூறலாம். ஆனால் ஆதாரங்களிலும் மிக முக்கியமானவை மூலாதாரம், அனுகதம் ஆக்ஞைதான். மூலாதாரத்தில் நிரந்தரமாய் வாசம் செய்யும் குண்டலினியை யோகிகள் அனுகதத்தில் வைத்துத்தான் அப் பியாஸிப்பார்கள் இந்த மூன்று ஸ்தானங்களில்தான் சுயம்பு

பாணம், இதரலிங்கம் என்ற மூன்றுலிங்கங்கள் இருக்கின்றன. குண்டலினியை அறிந்தவர்கள் யோகப் பயிற்சி உடையவர்களும் இதனை இக்கருத்தை வரவேற்பார்கள்.

திருமுருகாற்றுப் படைக்கு உள்ளுரைப் பொருளாக சில தத்துவங்கள் விளக்கப்பட்டன. இவ்வாறு தத்துவங்களைப் போதிப்பதனாலேயே முருகனிடம் ஆற்றுப்படுத்த முடியும். உள்ளுரையறிந்தால் முருகனின் வேலாயுதம் நம்மைச்சிறைப் படுத்தியிருக்கும் மாயா பூதத்தைக் கொன்று விடுதலையளிக்கும். இந்த அளவிலே திருமுருகாற்றுப்படையை நக்கீரர் முடிக்கின்றார்.

நக்கீரர் தாமுரைத்த நன்முருகாற் றுப்படையைத்
தக்கோல் நாள்தோறும் சாற்றினால் — முக்கோல
மாமுருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளித்
தான் நினைத்த வெல்லாம் தரும்.

திருமுருகாற்றுப்படை உரை முற்றும்.


## "ஞானசம்பந்தம்"

### அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருகிறது. சமயப்பொருள் முதலியவை குறித்த தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையானது. சந்தாத் தொகையைக் கீழ்க்கண்ட முகவரிக்கே அனுப்பி வைக்கவும்.

ஆண்டுக் கையொப்பம்'

உள்நாடு ரூ. 6–00 வெளிநாடு ரூ. 10-00

செயலாளர், "ஞானசம்பந்தம்" அச்சகம்"

தருமபுரம், மாயூரம் P. O.

257

# அருள் மொழி அமுது

திரு. ஸ்ரீ ராமநாமப்பரதேசி அவர்கள்,
3119, கீழ இரண்டாம் வீதி.
புதுக்கோட்டை-1, திருச்சி மாவட்டம்.

## 29; D. கண்டறியாதன கண்டேன்!
## (அப்பர் சுவாமிகள் சரித்திரம்)

திருவாய்மூரிலிருந்து திருமறைக்காடு திரும்பியதும்ஞான சம்பந்தரை மதுரைக்கு வந்து சமணர்களை வென்று சைவந் தழைக்குமாறு செய்ய வேணுமென்ற வேண்டுகோளுடன் பாண்டிமாதேவி மந்திரி குலச் சிறையாரும் விடுத்த தூதர்கள் வந்திருந்தனர். அப்பர் அது கண்டு அஞ்சி "குளித்தால் உடம் பிலிருந்த கிருமிகள் அழியும் அது உயிர்வதை எனக்கூறி உடம்பில் உள்ள மாசுகளை ஒழிக்காமல் தீய தொழில்செய்யும் அமணர் மாயம் நானறிவேன் "தாங்கள் செல்ல வேண்டாம்" எனத் தடுத்தார். சம்பந்தப் பெருமான் "நான் சமணரை அழிக்கச் செல்லவில்லை, அவரது நிலையை மாற்றச் செல்லு கிறேன். அத்துடன் திருநீற்றையணிந்து வாழும் மந்திரியாரை யும் மன்னவன் தேவியைக் காணச் செல்லுகிறேன், தங்கள் உதவி கொண்டுதான் போகிறேன்". என்றார்.

என்றுகூற "எல்லையிலா நீறுபோற்றும் இருவரையும்
சென்று காணும் கருத்துடையேன்: அங்கு தீங்குபுரி அமணர்
நின்ற நிலைமை அழிவித்து: சைவநெறி பாரித்தன்றி
ஒன்றுஞ் செய்யேன் ஆணைஉமது என்றார் உடைய பிள்ளையார்

சம்பந்தப் பெருமான் பாண்டிநாடு சென்றார். அப்பர் சுவாமி கள் திருமறைக்காடு விட்டுப் புறப்பட்டு சம்பந்தருக்கு ஆயிரம் பொன்னளித்த திருவாடுதுறை சென்று வணங்கினார்.

பழையாறை என்ற தலத்திலுள்ள சிவலிங்கப் பெரு மானைச் சமணர்கள் மறைத்து தங்களது கோயிலாகச் செய்தி ருந்தனர். சிவபெருமானை அவ்விடத்தில் தரிசித்தாலன்றி உணவு கொள்ளுவதில்லை என உண்ணாவிரதமிருந்தார் அப்பர்

இறைவன் அரசரது கனவில் தோன்றி "சமணர்களை அழித்துப் பழையாறையில் உள்ள நம் கோயிலை நம் அன்பனான நாவுக்கரசர் கும்பிடுமாறு செய்க' எனக் கட்டளையிட்டார். அரசனும் அவ்வாறே செய்தான். மகிழ்ச்சியடைந்து இறைவனை தரிசித்த அப்பர் "சமணர் மறைத்தாலும் எம்பெருமானை மறைக்க முடியுமா?"

திருச்சிற்றம்பலம்

தலையெலாம் பறிக்குஞ் சமண் கையருள்
நிலையினான் மறைத்தால் மறைக் கொண்ணுமோ?
அலையினார் பொழிலாறை வடதளி
நிலையினான் அடியே நினைந்துய்ம் மினே.

திருச்சிற்றம்பலம்

என்று பாடினார். பழையாறை விட்டுப் புறப்பட்டு திருவெறும்பூர், திருக்கற்குடி முதலானவை தரிசித்து வரும் போது, திருப்பைஞ்ஞீலியில் பசி ஏற்பட்டது. பசி வந்திடப் பத்தும் பறந்துபோம் என்பர். ஆனால் ஞானியான அப்பர் அதனால் பாதிக்கபடவேயில்லை இறைவனே அங்கு ஒருகுளம் உண்டாக்கி, பொதி சோற்றுடன் காத்திருந்தார். திருநாவுக்கரசர் இறைவன் கொடுத்த சோற்றையும் தண்ணீரையும் ஏற்று, அவரை நோக்கி, "எங்கு செல்கிறீர்?" எனக் கேட்க, "திருப்பைஞ்ஞீலி செல்லுகிறேன். "என அவர் கூற, அப்பர் "நானும் அங்குதான் செல்லுகிறேன்" என்றார், திருப்பைஞ்ஞீலி வரை வந்5 பெரியவரைக் காணேம். இறைவனின் கருணையை எண்ணி அப்பர் வியந்தார். பின்னர் திருவண்ணாமலை சேர்ந்தார், திருவண்ணாமலை வணங்கிக் காஞ்சிபுரம் சேர்ந்த காலத்தில் அப்பர் சுவாமிகள் மாதிரியே அடியவர்கள் உடையணிந்து அவரை எதிர்கொண்டழைத்தனர். திருக்கழுக்குன்றம், திருமயிலை, திருவொற்றியூர் முதலானவைகளைத் தரிசித்துக் கொண்டு காளத்தி மலையடைந்தார்.

திருச்சிற்றம்பலம்

மனத்தகத்தான்: தலைமேலான்: வாக்கினுள்ளான்: வாயாரத்
தன்னடியே பாடும் தொண்டர்
இனத்தகத்தான்: இமையவர்தம் சிரத்தின் மேலான்
ஏழண்டத்தப் பாலான் இப்பாற் செம்பொன்

புனத்தகத்தான்: நறுங்கொன்றைப் போதினுள்ளான்
பொருப்பிடையான்: நெருப்பிடையான்: காற்றினுள்ளான்
கனத்தகத்தான்: கைலாயத்துச்சியுள்ளான்: காளத்தியான்:
அவன் என் கண்ணுள்ளானே.

திருச்சிற்றம்பலம்

என்று பாடும்போது **கைலாயத்துச்சியுள்ளான்** என்று வாக்கு வந்ததால் கயிலையைக் காண வேண்டுமென்று ஆசை ஏற்பட்டது. தமிழ் வழங்கா நாடு என்பதால் ஞானசம்பந்தர் செல்லவில்லை. அப்பர் வாகீசராகக் கைலை மலையில் இருந்ததால், கைலையைக் காணவேண்டுமென்ற ஆவல்ஏற்பட்டது.

சேணிலவு திருமலையில் திருப்பணியாயின செய்து
தாணுவினை அம்மலைமேல் தாள்பணிந்த குறிப்பினால்
பேணுத் திருக் கயிலைமலை வீற்றிருந்த பெருங்கோலம்
காணுமது காதலித்தார் கலை வாய்மைக் காவலனார்.

ஆதலால் திருப்பருப்பதம் (ஸ்ரீசைலம்) மத்தியபைரம் (Central Provinces) முதலானவை கடந்து காசியடைந்தார். காசியிலேயே கூடவந்தவர்களை நிறுத்தி, பயணம் தொடங்கி இமயச் சாரலையடைந்தார். காய்கனிகள்கூடக் கிடைக்காது மனிதர்கள் சஞ்சரிக்காத இடங்கள் வழியாகச்சென்றார் காட்டிலிருந்த மிருகங்கள் இவரெதிரிலே அடங்கின்றன. பாம்புகள்படமெடுத்து தமதுமணிகளால் விளக்கமாட்டின. நடந்து கைகால்கள் தேய்ந்தன. மார்பால் புரண்டு சென்று போக முடியாது ஓரிடத்தில் தங்கினார். மனம் கைலையையடைந்தது உடல் நடுவிலேயே தங்கிவிட்டது. இவர் ஏன் கைலையை அடைய முடியவில்லை கைலை சென்றால் இவர் அங்கேயே தங்கிவிடுவார். தமிழ்நாட்டிற்கு இவரது தேவாரப் பாடல்கள் கிடைக்காது போய்விடும். அதனால்தான் இவருக்குக் கைலைக் காட்சி கிடைக்கவில்லை. இவர் இருக்குமிடத்திற்குப் பக்கத்தில் ஒரு குளத்தை உண்டாக்கி இறைவரே முனிவுருவத்தில் வந்தார்.

அன்னதன்மையர் கைலையை அணைவதற் கருளார்
மன்னு தீந்தமிழ் புவியின் மேற்பின்னையும் வழுத்த
நன்னெடும் புனல் தடமும் ஒன்றுடன் கொடுநடந்தார்
பன்னகம் புனை பரம ரோர் முனிவராம் படியால்.

“இவ்வளவு துன்பப்பட்டுக் கொண்டு இம்மலைக்கு ஏன் வந்தீர்?” என முனிவர் கேட்க “சிவபெருமான் அம்மையுடன் வீற்றிருக்கும் காட்சி காணவந்தேன்” என அப்பர் பதில் கூறினார். “மனிதரால் கைலாயத்தையடைய முடியுமா? தேவர்களால் கூட இயலாதே வெய்யில் நிறைந்த இவ்விடத்திற்கு ஏன் வந்தீர். திரும்பிப் போய்விடும்” என்று முனிவர் கூற “சிவபெருமானுடைய திருக்கோலம் கண்டாலொழியச்செல்ல மாட்டேன்” என்றார் அப்பர்.

மீளும் அத்தனை உமக்கினி கடன் என விளங்கும்
தோளும் ஆகமும் துவளும் முந்நூல் முனி சொல்ல
ஆளுநாயகன் கைலையின் இருக்கை கண்டல்லால்
மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன் என மறுத்தார்.

முனிவராகவந்த பெருமான் மறைந்து “நாவுக்கரச! எழுந்திரு என அசரீரியாகக்கூற; நல்ல உடல் பெற்று அப்பர் சுவாமிகள் எழுந்து நின்றார். “பெருமானே கைலைக் காட்சி காண வேணும் என பணிந்து வேண்டினார்.

அண்ணலே! என்னையாட் கொண்டு அருளிய அமுதே
விண்ணிலே மறைந்தருள் புரிவேத நாயகனே!
கண்ணினால் திருக்கையிலையிலிருந்த நின்கோலம்
நண்ணி நான்தொழ நயந்தருள்புரி என்றார்.

“நாவுக்கரச! இந்தக் குளத்திலே மூழ்கி, திருவையாற்றில் சென்று நம் கயிலைக்கோலம் அங்கு காண்பாய்!” என்றுஇறைவன்கூற இமையப் பொய்கையில் மூழ்கிய அப்பர் திருவையாற்றின் ஒரு குளத்தில் எழுந்தார். திருவையாறு கைலையாகக் காட்சி தந்தது.

வெள்ளி வெற்பின்மேல் மரகதக் கொடியுடன் விளங்கும்
தெள்ளு பேரொளி பவளவெற்பென இடப்பாகம்
கொள்ளு மாமலையாளுடன் கூட வீற்றிருந்த
வள்ளலாரை முன்கண்டனர் வாக்கின் மன்னவனர்.

கைலைக் காட்சி கண்டு ஆடிப்பாடி அகமகிழ்ந்திருந்தனர். போற்றித் திருத்தாண்டகம் பாடினர். கண்டறியாதன கண்டேன் என உலக மக்கள் காண முடியாத காட்சி கண்ட

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

# ஞானசம்பந்தரும் நற்றமிழும்

தத்புருஷ தேவநாம
திரு. சு இராமலிங்கம் அவர்கள்,
சுலலித ஜோதிடர், ஸ்ரீ மாணிக்கவாசகர் இல்லம்
சிகம்பட்டி, K. புதுப்பட்டி P.O
இலாலாப்பேட்டை வழி, திருச்சி ஜில்லா

---

திருச்சிற்றம்பலம்

நிறைவெண் கொடிமாட நெற்றிநேர் தீண்டப்
பிறைவந் திறைதாக்கும் பேரம்பலந் தில்லை
சிறைவண்டறை யோவாச் சிற்றம்பலமேய
இறைவன் கழலேத்தும் இன்பும் இன்பமே.

திருச்சிற்றம்பலம்

இறைவனை ஏத்தினால் அவனை மறவாமலிருக்க ஏதுவாகும் அப்படி மறவாமல் ஏத்தினால் அதனால் வரும் பயன் என்ன என்று வினஎழும் அதற்குவிடை இந்த நான்காவது திருப்பா சுரத்திலே அருளுகிறார். அழுதுலகை வாழ்வித்த கவுணியர்தலை வித்தர். என்ன பயன் என்றால், இன்பங்கிடைக்குமென்கிறார். பாசத்திலே கட்டுண்டு மயங்கிக் கிடந்து இன்புமெங்கேஇன்ப மெங்கே என்று தேடித்திரிகிற நமக்கு வேறு பெயரால் இறை வழிபாட்டின் பயனைக் கூறுமல் இன்பமென்று கூறியது மிக அருமையாக இருக்கிறது எந்த மனிதனும் விரும்பித் தேடுவது இன்பமே இன்பத்தையும் அடைகிறன். அப்படி அடையப் பட்ட இன்பமே பெருந் துன்பமாக மாறுகிறது உடனே

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

தாக கழிபேருவகை யெய்தினர், கைலைக் காட்சி மறைந்து திருவையாறு தென்பட்டது.

பின்னர் தில்லை ஸ்தானம், திருமழபாடி, திருப்பூந்துருத்தி முதலான தலங்களை தெரிசித்தார். திருப்பூந்துருத்தியில் பாண்டிய தேசத்தில் சமணரை அனல், புனல் வாதங்களில் வென்ற ஞானசம்பந்தர் அப்பரைக் காண வந்தார்.

திருச்சிற்றம்பலம்

அதை விட்டு வேறு வகையில் இன்பத்தைத் தேடுகிறான் தேடி இன்பமென்றடைகின்றான் அதிலும் துன்பமே, உடனே அதை விடுத்து வேறுவகையில் இன்பந் தேடுகிறான். இப்படி வண்டானது தினையளவு தேனை விரும்பி பூக்கள் தோறும் சுற்றியலைவது போல் வாழ்நாள் முழுவதும் இன்பத்தை தேடி நிலையான இன்பத்தைப் பெறாமல் அவதியுற்று அமைதியின்றி துன்ப வெள்ளத்தில் மூழ்கிக் கிடக்கிறான் ஏனெனில் உலகில் உள்ள இன்பமனைத்தும் சிறிதளவாயும் நிலையிலாதன வாயுமிருப்பதால் இந்த அவதி அவ்வளவும் அறியாமையே "நில்லாதவற்றை நிலையினவென்றுணரும் புல்லறிவாண்மை கடை: என்பார் திருவள்ளுவர். அப்படி அவதியுறாமல் என்றும்நினைத்தாலும் பேசினாலும் கேட்டாலும் கண்டாலும் எப்போதும் எலும்பெல்லாம் இன்பமயமாக மாறாமல் உள்ள இன்பம் ஒன்றுண்டு. அது அம்பலவாணரடிக் கமலம் ஏத்தும் இன்பம் என்கிறார். நாயேனையாண்டருளிய மாணிக்கவாசகசுவாமிகள்

திருவாசகம்

"தினைத்தனையுள்ள தோர்பூவினில் தேனுண்ணாதே
நினைத்தொறும் காண்டொறும் பேசுந்தொறு மெப்போதும்
அனைத்தெலும்புள் நெகவானந்தத் தேன் சொரியும்
குனிப்புடை யானுக்கே சென்றுதாய் கோத்தும்பீ"

என்பதால் விளங்கிக் கிடக்கிறது உலகம் முழுவதும் மாயையிலிருந்து தோன்றியதால் அவற்றிலிருந்து வரு மின்ப மும் மாயமே, வாழ்வாவது மாயம்மிது மண்ணாவது திண்ணம்.என்பார் சுந்தரமூர்த்தி சுவாமிகள் = இவ்வுலகவின்ப மாத்திரமல்ல வைகுண்டம், சத்தியலோகம், சொர்க்கலோகம் முதலான மேலுலக வாழ்வனைத்தும்இப்படித்தான். இதற்குப்பிரமாணம் சிவஞான சித்தியாரில்.

மண்டனில் வாழ்வும் வானத்தரசயன் மாலார்வாழ்வும்
எண்டரு பூதபேத யோனிகள் யாவுமெல்லாம்
கண்டவிந்திர மாசாலங்கனக் கழுதிரதங் காட்டி
உண்டுபோலின்றாம் பண்பிலுலகினைய சத்து மென்பார்,

உலகிலுள்ள மனிதர்களில் பலபேர் அழிந்து போகுமியல்புடைய இவ்வுலக இன்பமே நிலையானதென்று அதிலே முழுப்

பற்றும் வைத்துக் கெட்டழிகிறார்கள். சில பேர் சொர்க்க லோக வாழ்வு முதலியன நிலைத்த இன்பமென்று கருதிக் கெட்டொழிகிறார்கள் சொர்க்கலோக வாழ்வின் உச்சியில் வாழ்ந்த தேவர் தலைவன் குமாரனாகிய சயந்தன் கூறுகிறான் எது நிலைத்த இன்பமென்று கவனித்துக் கேளுங்கள்.

மாடே சூழ்வார் தம்மொடு மைந்தன் சிறைபுக்கான்
காடேபோனான் இந்திரன் ஏனோர் கவலுற்றார்
பாடே விண்ணோர்தம் பதம் முக்கட் பரன் நல்கும்
வீடே அல்லால் துன்பறும் ஆக்கம் வேறுண்டோ.

என்பதால் நன்றாகத் தெளியலாம். தெளியவே அவை யெல்லாம் வெறும்பொய். நீர்க்குமிழி போன்றது எனநினைக்க வேண்டும். ஒருவன் கனவு நிலையில் அரசனாக வாழ்ந்தான் அதை அப்பொழுது உண்மையென்றே நினைத்தான். உடனே விழிப்பு வந்தது எல்லாம் பொய்யென உணர்ந்தான் அது போல இந்திரலோக வாழ்வு முதலிய அனைத்தும் பொய் யென்று வெறுத்துத் தள்ளி சிவபெருமான் திருவடியையே ஏத்தி வழிபடும் மெய்யன்பர்களுக்கு அவன் உள்ளே புகுந்து பேராத வின்பத்தை நிச்சயமாக அருளுவார் இதற்கு பிரமா ணம் சிவஞான சித்தியாரில்.

குறித்தடியின் நின்றட்ட குணம் எட்டுச் சித்தி
　　சோக நதன் முதல் வாழ்வுகுலவு பதம் எல்லாம்
வெறுத்து நெறியறு வகையும் மேலொடு கீழடங்க
　　வெறும் பொய்யென நினைந்திருக்க மேலொடு கீழில்லான்
நிறுத்துவதோர் குணம் இல்லான் தன்னை ஒருவர்க்கும்
　　நினைப்பரியா னென்றுமிலான் நேர்பட வந்துள்ளே
பொறுப்பரிய பேரன்பை யருளியதன் வழியே
　　புகுந்திடுவன் எங்குமிலாப் போகத்தைப் புரிந்தே.

என்பதனால் நன்றாக விளங்கும் விளங்கவே சிவபெருமானு டைய திருவடியை ஏத்தி இன்பம் பெறமுயலவேண்டும். சிவ பெருமானை வழிபடும்இன்பம் இன்பமாகவே இருக்கும். மற்ற இன்பம் இன்பம் போலத் தோன்றி துன்பமாக மாறும் இவ் வளவு அரிய உண்மைகளை இறைவன் கழலேத்தும் இன்ப இன்பமே என்பதால் விளக்குகிறார் புகலிவித்தகர். இதில்

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY

இன்னொரு ரகசியம் உள்ளது. முத்தியடைவதே இன்பம் என்று கூறாமல் ஏத்துவதே இன்பம் என்று கூறுகிறார் இதனால் திருவடியை ஏத்தி வழிபடும் இன்பமே முத்தியென்றும் வழிபடுவதையே மிக விரும்பும் மெய்யடியார்களிடமே சிவபெருமான் மிக அன்பு செய்தருளுவார் வழிபாடு அச்சத்தோடும் அன்போடும் நிகழவேண்டும் இவ்விரண்டிலொன்று இல்லையேல் முழுமையான வழிபாடாகாது அருணகிரிநாத சுவாமிகள் திருவகுப்பிலே ஆன பயபத்திவழிபாடு பெறுமுத்தியதுவாக நிகழ் பத்தசனவாரகக்காரனும் என்றருளுகிறார்.

கேடும் ஆக்கமுங் கெட்ட திருவினர்
ஓடுஞ் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
கூடுமன்பினில் கும்பிடலேயன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினர்.

என்றுஞ் சேக்கிழார் சுவாமிகள் அருளுகிறார். சிவபெருமானை வழிபடுகிறதில் வருகிற இன்பம் வேறு எந்த வழிபாட்டிலும் வாராது ஏனெனில் அவர் ஒருவர்தான் பேரா ஒழியா பிரிவிலா மறவா நினையா அளவிலா மாளா இன்பமா கடலாக விளங்குகிறார். அதனால் அவரைச் சார்ந்தோர்க்கும் அப்படியே சிவபெருமானை வழிபடும் இடம். மூன்று அது நமக்கு சிவ தீக்ஷைசெய்துவைத்த குரு, சிவலிங்கத் திருமேனி, சிவனை வழிபடும் மெய்யடியார். ஆகிய இந்த மூன்றிடங்களிலும் மறவாது வழிபடவேண்டும். மற்றவிடங்களில் மற்ற மதக் கோயில்களில் மறந்தும் வழிபாடு செய்யக் கூடாது. இதற்குப் பிரமாணம் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப்பாட்டில்.

நொந்தா வொண் சுடரே நுனையே நினைந்திருந்தேன்
வந்தாய் போயறியாய் மனமே புகுந்து நின்ற
சிந்தா யெந்தை பிரான் திருமேற்றளியுறையும்
எந்தா யுன்னையல்லால் ஏத்தமாட்டேனே.

என்பதால் நன்றாகத் தெளியலாம். சுந்தரமூர்த்தி சுவாமிகள் பெற்ற பெருவாழ்வுக்கு மேல் உயர்ந்த வாழ்வு எங்குமில்லை. அவ்வளவுயர்ந்த வாழ்வு பெற்ற பெருமான் சிவனைத் தவிர வேறு யாரையும் வழிபடக் கூடாது என்று அருளுகிறார். ஆனால் சிவதீக்ஷைபெற்ற அன்பர்களில் சிலபேர்வரம்புகடந்து

MAHAMAHOPADHYAYA Dr. U. V. SWAMINATHA IYER LIBRARY

வேறுமதக் கோயில்களிலும் சிவாகமவிரோதமான வழிபாடும் செய்கிறார்கள் அவர்கள் என்ன கருதிச் செய்வார்களோ, ஒருவேளை சுந்தரமூர்த்தி சுவாமிகளை விட பெரிய பேறு பெற எண்ணி செய்வார்களோ அறியோம். சிவ பெருமானை வழிபட்டால் இருமையின்பமும் அடைய லாம் என்று உணர்த்துகிறார் ஞானசம்பந்தர் நிறைந்த மாடங்களின் நடுவில் வெண்மையான கொடிகள் சந்திர மண்டலம் வரைபறக்கும். பேரம்பலத்தில் தில்லைச்சிற்றம்பலத்தை இடமாகக் கொண்டு நமது பிறவித்துயர் கெட ஆடுகின்றான் அவனையே ஏத்துங்கள் உண்மையான இன்பத்தைப்பெறலாம். என்கிறார் ஞாலமுய்ய வந்த ஞானசம்பந்தர். ஒவ்வொரு மனிதரும் சிவாகம முறைப்படி சிவகுருவிடத்திலே சிவதீக்ஷை பெற்று சிவனை வழிபட்டு இன்பம் பெற முயலவேண்டும். இந்த முறையில் நில்லாது, நாம் எல்லாந் தெரிந்தவர்கள் மிகச் சமர்த்தர்கள் என்று எண்ணிக் கர்வித்து சிவனை வழிபடும் முறையில் வழிபடாது = வீணே காலத்தைக் கழித்து எமன் கையில் அகப்பட்டு துன்புறும் போது அங்கு யார் உதவிசெய் வார்கள். எண்ணிப் பாருங்கள் சிந்தித்துத் தெளியுங்கள்.

மானுடப் பிறவி தானும் வகுத்தது மனவாக்காயத்
தானிடத்தைந்து மாடும் அரன் பணிக்காக வன்றோ
வானிடத் தவருமண்மேல் வந்தரன்றனையர்ச்சிப்பார்
ஊனெடுத்துழலு முகர் ஒன்றையு முணராரந்தோ.

இந்த அருமையான திருப்பாட்டை பல தடவை படித்து சிந்தியுங்கள். சிந்தித்துச் சிவனை வந்தியுங்கள் என்று அருளுகிறார் அருணந்தி சிவாசாரிய சுவாமிகள். இறைவன் கழலேத்தும் இன்பம் இன்பமே என்பதால் இத்தனையும் விளங்குகிறது.

திருஞானசம்பந்தர் திருவடி வாழ்க.

---

(தொடரும்)

# "அருட்பெருஞ்சோதி வடலூர் ஸ்ரீ இராமலிங்க அடிகள்"

ஊரன் அடிகள் சொற்பொழிவின் சாரம்

தொகுத்தவர்: திரு. ச. தேவதாஸன் அவர்கள்,
(கணக்கர்) குமாரசாமி மடம்
கேதாரகட்டம்
வாரணசி [உ. பி.]

---

அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை சுவாமிகள் ஸ்ரீ இராமலிங்க அடிகளாரின் அறநெறிகளை அகிலமெலாம் பரப்பி வரும் அரும்புகழ்ச் செம்மல் வடலூர் திருமிகு ஊரன் அடிகள் அண்மையில் டெல்லிக்கு வந்தார்கள். உதவி ஜனதிபதி கனம் ஜட்டி அவர்களின் சீரிய தலைமையில் முதற் கூட்டம் தொடங்கி அதையடுத்து சுமார் பத்து நாட்கள் பேருரையாற்றி விட்டுப் பிறகு ஸ்ரீ காசியம்பதிக்கும் வருகை தந்தார்கள் காசி மாநகரில் அளப்பரும் அறப்பணியாற்றி வரும் ஸ்ரீ குமாரசாமி மடத்தில் 18—3—76 அன்று மாலை திரு. ஊரன் அடிகளின் சொற்பொழிவு நிகழ்ந்துற்றது. அது போழ்து ஸ்ரீ இராமலிங்க அடிகளாரைப் பற்றி அவர்கள் பேசியதில் சில கருத்துரைகள்.

நம் தமிழ்நாட்டில் அவதரித்த அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர், குமரகுருபரர், தாயுமானவர், இராமலிங்க அடிகளார் போன்ற ஆன்றோர்கள் வாழையடி வாழையாக வழித்தோன்றி சைவ சமயத்தைப் போற்றி வளர்த்து புகழ்ந்து பேணி உயர்ந்து சிறக்கச் செய்தார்கள்.

வாழை மரமானது அடிமுதல் நுனி வரையில் தன்னை மனிதனுக்காகவே அர்ப்பணித்து விடுகிறது. உணவுண்ண இலையாகவும், அது காய்ந்தால் சருகாகவும் கிழிந்தால் தொன்னையாகவும், மிகவும் கிழிந்தால் அடுப்பெரிக்கவும் பயன்படு கிறது அதன் பூவும், பிஞ்சும், காயும் நமக்கு உணவாக அமைகிறது, முற்றிய பிறகு கனியாகி இனிமை தருகிறது. வாழை மரப்பட்டை இலை போலவும், நாராகவும், அதன்சாறு

மருந்தாகவும் பயன்படுகின்றது. இப்படி எல்லா விதத்திலும் தன்னை மனிதனுக்கு அர்ப்பணித்து விட்டு, தான் மறைந்தாலும் தன்னைப் போல் ஒருவாரிசையும் தோற்றுவித்து விடுகிறது. அதேபோன்றுதான் சைவப் பெரியோர்கள் தனக்கென வாழாமல், தனக்கென்று எதையும் செய்யாமல், உடல், பொருள், ஆவி அனைத்தையும் சைவ சமயத்தின் வளர்ச்சிக்கும், எழுச்சிக்கும் அர்ப்பணித்தே வாழ்ந்தார்கள். தான் போனாலும் தன் வழியில் வழிவழியாய் வாரிசையும் தோன்றும்படி செய்துவிடுகின்றார்கள். இதனால்தான் ''வாழையடி வாழையாய் வந்த திருக்கூட்டம்'' என்று ஒப்பிட்டு உயர்வாகச் சொல்லுகிறோம்.

இத்தகைய சைவப் பெரியோர்களின் வரிசையில் வந்த ஸ்ரீ இராமலிங்க அடிகளார் சுமார் 150–ஆண்டுகளுக்கு முன்னர் பிறந்து, 100–வருடங்களுக்கு முன்னர் வரை வாழ்ந்தவர் இவருடைய கொள்கைகளுள் தலையாயவை இரண்டு, ஒன்று, புலால் உண்ணாமை, மற்றொன்று ஏழைகளுக்கு இல்லையென்று சொல்லாமை இவ்விரெண்டு கொள்கைகளையும் தன் வாழ்வின் லட்சியமாக பிறப்பின் நோக்கமாகக் கொண்டு தன்னிரு கண்கள் போல போற்றிக் கடைபிடித்து வாழ்ந்தார்.

அடிகளார் இதைப்பற்றி சொல்லும் போது, புலால் உண்ண வேண்டுமென மனத்தால் நினைப்பதே அந்தஎண்ணம் எழுவதே மிகக் கொடிய பாவம் என்கிறார் மீன் பிடிக்கும் வலையை ஒருவன் எடுத்துச் செல்வதைக் கண்டாலே என் மனம் கதறுகிறது இதனால் எத்தனை உயிர்களை இன்று கொல்லப் போகிறானே! என, என் உடலும் உள்ளமும் நடுங்குகிறது என்று இயம்புகிறார்

சிவகாருண்யத்தைப் பற்றி வள்ளலார் விளக்கும் போது' எல்லோரும் சிவகாருண்யம் என்றால் என்ன? என்பதை எளிதில் உணருமாறு எளிமையான கதையைச் சொல்லி இனிதாய் விளக்குகிறார். இரண்டு சாதுக்கள் வழியில் நடந்து போய்க் கொண்டுள்ளனர். அதில் திடீரென ஒருவர் மயக்கத்தால்கீழே சாய்ந்து விடுகிறார். அவருடன் வந்தவர் அவருக்கு மூர்ச்சை தெளிவித்து ஏன் சுவாமி! நாம் இருவரும் நன்றாக நல்லநிலையில்

தானே வந்து கொண்டிருந்தோம் என்று வினவ, அதற்குஅவர் சுவாமி! நான் நடக்கும் போது என் கால் இடறியதால், இயற் கையாய்க் கிடந்த சில மண் பொறுக்குச் சட்டிகள் என் கால் பட்டுச் சிதறி தன் இயற்கையிலே மாறியது இதைக் கண்டதும் என்னுல் இப்படி அதற்கு ஆகிவிட்டதே என்று என் மனம் பதைத்தது. அதனுல் மயங்கிவிட்டேன் என்று சொல்லி மீண் டும் மயக்கமுற்ருராம் இத்தகைய மனம் உடைமைதான் 'சிவ காருண்யம்' என்று அடிகளார் விளக்குகிருர். மேலும் அடிக ளார் காலத்தில் அன்னதானத்திற்காக மூட்டிய அடுப்புசுமார் நூற்றைந்து ஆண்டுகளாக அணையாது இன்றும் அன்னத்தை வடித்துக் கொட்டிய வண்ணம் இருக்கின்றது.

இது ஒரு சாதாரண காரியமன்று, அதிகாலையும் சரி அந்தி மாலையும் சரி, நடு இரவும் சரி எந்த நேரம் எத்தனை பேர் வந் தாலும் இன்றும் அடிகளாரின் அருள் வாக்குபடியே இல்லை என்று சொல்லாமல் அன்னம்பாலிப்பு நடந்து கொண்டே யுள்ளது. வள்ளலாரின் நல்லருள் என்றும் இருப்பதால்தான் இத்தகு அறச்செயல் இனிதே நிகழ்ந்து வருகின்றது. அன்று அடிகளார் ஏற்றிய ஜோதி நூற்றைந்து ஆண்டுகளுக்குப்பிறகு இன்றும் அணையாது அழியா அமரதீபமாக உலகிற்கு ஒப்பற்ற ஜோதியாக உயர்ந்து நிற்கிறது. ஆண்டவனின் சொரூபமாக வடலூரில் வழிபாடு நடத்தப்படுகின்றது. அவ்வழிபாடு அடி யார்கள் அனைவர்க்கும் பக்தியையும் பரவசத்தையும் ஊட்டி பேரின்பக் கடலுள் ஆழ்த்துகிறது உலகில் ஒன்றே தெய்வம் என அத்தெய்வத்தை ஜோதி வடிவிலே ஜோதியில் கண்டார் அடிகளார்.

கற்பூரம் எரிந்தால் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விடுவது போல, அடிகளார் ஜோதியோடு ஜோதியாய் இரண் டறக் கலந்து அருட்பெருஞ் ஜோதியானுர் ஆண்டுதோறும் தைப்பூசத் திருநாளில் ஏழு திரையும் நீக்கப்பட்டு அடிகளார் ஏற்றிய ஜோதியினை அடிகளார் கலந்து மறைந்த ஜோதியினை, ஒளி வெள்ளமான இறைவனை ஆஸ்தீக மக்கள் அகங்குளிர தரிசனம் செய்து அருளைப் பெறுகிருர்கள்.

மேலும் இன்று காசியம்பதியில் சைவ சமயத்தை வளர்க்கும் திருக்கரங்களாக, சைவ சமயத்தைக் காக்கும் இரு தூண்களாக இருப்பது ஸ்ரீ குமாரசாமி மடமும் நாட்டுக் கோட்டை நகரத்தார் சத்திரமும்தான் என்றால் மிகையில்லை. சிவனுக்குக் கண் மூன்று இருப்பது போல் ஸ்ரீ காசியம்பதியில் நெற்றிக் கண்ணைப் போல ஸ்ரீ விஸ்வநாதர் ஆலயம் விளங்குகிறது.

மற்ற இருகண்களைப் போல இந்த இரண்டு தர்ம ஸ்தாபனங்களும் இருந்து சைவத்தை வளர்த்து, சமயத்தைப்போற்றி தர்மத்தைக் காப்பாற்றி அறவழியில் பீடுநடை போடுகிறது என்று மகிழ்ந்து கூறி தன் உரையை இனிதே முடித்தார்.

அடுத்து ஸ்ரீ குமாரசாமி மடத்தின் ஏஜண்ட் திரு, கல்யாணசுந்தரம் பிள்ளையவர்கள் நன்றி கூறுகையில் காசி சிறப்புக்குரிய ஸ்தலம். அதில் இதுபோன்ற நல்லோர்களின் சொற்பொழிவைக் கேட்பது மேலும் சிறப்புக்குரியது இந்த சிறந்த நிகழ்ச்சிக்கு முதற் காரணமாக அமைந்தவர். நாட்டுக் கோட்டை நகரத்து சத்திரம் மானேஜர் திரு, வினைதீர்த்தான் செட்டியார் அவர்கள்தான் என்று கூறினார்கள். அடுத்து வினைதீர்த்தான் செட்டியார் அவர்கள் சைவசமயத்தை வளர்க்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் உறுதியான கொள்கையுடன் நற்பணியாற்றும் ஊரன் அடிகள் அவர்கள் என்னுடைய விருப்பத்திற்கிணங்கி. பலனை நோக்காமல் பரந்த மனப்பான்மையுடன் குமாரசாமி மடத்திற்குப் பேச வந்தார்கள். ஆகவே எல்லா வகையிலும் பெருமைக்கும் நன்றிக்கும் உரியவர் திரு, ஊரன் அடிகளே என்று உவப்புடன் கூற கூட்டம் சிறப்புடன் நடந்தேறியது.

---

உயர்மானுடம் – 9

# உடலோம்பல் – உணவு

புலவர் ச. தனுக்கோடிஇராமசாமி பி. ஏ. அவர்கள்,
தமிழாசிரியர் ஆ. வை. உயர்நிலைப்பள்ளி,
சாத்தூர் 626203

(மலர் 27 இதழ் 4 230-ம் பக்கத் தொடர்ச்சி)

உணவு மனிதனின் உடல் வளர்ச்சிக்கும், பழுதுபட்ட பாகங்களை சீர்படுத்தவும், வேலை செய்ய சக்தியளிக்கவும், இழந்த சக்தியை ஈடுகட்டவும், உடலுக்குத் தேவையான வெப்பம் அளிக்கவும். உயிர் வாழ்வதற்கும் மிக அவசியமான தாக இருக்கிறது.

உணவை மரக்கறி உணவு, புலால் உணவு என்று உலகெங்கும் பிரித்துப் பேசுகிறார்கள். மனிதனுடைய பற்கள், குடல் அமைப்புக்கள் மரக்கறி உணவிற்கு ஏற்பவே படைக்கப்பட்டுள்ளனவாக அறிஞர்கள் கூறுகிறார்கள். ஆனால் உலகில் மிகப் பலர் புலால்உணவு உண்பவர்களாகவே இருக்கிறார்கள். இவ்விரு வகைகளில் எதை ஏற்றுக்கொள்ளலாம் என்ற வழக்குத் தொடர்ந்து கடுமையாக இருந்து வந்தது. இப்பொழுது கடுமை குறைந்துள்ளது. மனிதர்கள் தங்கள் விருப்பத்திற்கேற்ப இரண்டில் எதையேனும் கொள்ளலாம்.

பாலையும் முட்டையையும் சிலர் புலால் உணவில் சேர்க்கிறார்கள். சிலர் மரக்கறிஉணவின் பக்கமாக இழுக்கிறார்கள். இதுபற்றி மகாத்துமாகாந்தியடிகள் "ஒரு சாதாரண மனிதன் பாலை மாமிச உணவாகக் கருதுவதில்லை, அதே சமயத்தில் முட்டைகளை மாமிச உணவாகக் கருதுகிறான். உண்மையில் அவை அப்படியல்ல இப்போது மலட்டு முட்டைகளும் உற்பத்தி செய்யப்படுகின்றன. சேவலைப் பார்க்கவே பெட்டைக் கோழியை விடுவதில்லை. என்றாலும் கோழி முட்டை இடுகிறது. மலட்டு முட்டை ஒருபோதும் குஞ்சாக ஆவ

தில்லை. ஆகையால் பால் குடிக்கிறவர்கள் மலட்டு முட்டைகளைச் சாப்பிடுவதை ஆட்சேபிக்க வேண்டியதில்லை'' என்று கூறுகிறார்.[1]

பாலைக் குடிப்பதிலுள்ள அளவு ஹிம்சை உறுதியாக முட்டைகளை உண்பதில் இல்லை. ஆனால் பரம்பரை பரம்பரையாக நம்உள்ளத்தில் ஆழப் பதிந்துவிட்ட எண்ணத்தால் முட்டையை நாம் புலால் உணவாகவும் பாலைச் சைவ உணவாகவும் கருதி வருகிறோம்.

நாம் உடல் நலத்தோடு இருக்க மாவுச்சத்து, புரதச்சத்து கொழுப்புச்சத்து, தாதுப்புக்கள், வைட்டமின்கள் ஆகியவை நாம் உண்ணும் உணவில் சரியான விகிதத்தில் இருக்கவேண்டும் இதைச் சரிவிகித உணவு என்பர்.

**மாவுச்சத்து:** இதைச் ஸ்டார்ச் என்று சொல்லுகிறார்கள். இதுவே அடிப்படைச் சத்தாகும். ஏறக்குறைய எல்லா உணவுப் பொருட்களிலும் இது உள்ளது. நாம் வேலைகளைச் செய்வதற்கு சக்தியும் உடலுக்கு வெப்பமும் அளிப்பது மாவுச்சத்தாகும். இது எல்லாவிதமான தானியங்களிலும், கிழங்குகளிலும், வழைக்காய், வாழைப்பழம், சர்க்கரை, தேன் ஆகிய வற்றிலும் உள்ளது.

**புரதச்சத்து:** இதைப்'புரோட்டீன்' என்பார்கள். இதை மரக்கறிப் புரதச்சத்து, பிராணிகளின் புரதச்சத்து என்று இரு வகையாகப் பிரிக்கலாம். இது குழந்தைகள் வளர்வதற்கும், தேய்ந்து போன பாகங்களை ஈடு செய்யவும் இது அதிகம் தேவை. பீன்ஸ்,பட்டாணியில் அதிகமாக உள்ளது. மொச்சை கொண்டக்கடலை, பருப்பு வகைகளிலும் அதிகமாக உள்ளது

**கொழுப்பு:** இதையும் இருவகையாகப் பிரிக்கலாம். உடலுக்குத் தேவையான வெப்பத்தைக் கொடுக்கிறது. மாமிசம், எண்ணெய், வெண்ணெய்,நெய் இவற்றில் அதிகமாகஉள்ளது.

**தாதுப்புக்கள்:** உடம்பிற்கு சில இரசாயனத் தாதுப் பொருட்கள் மிகவும் அவசியமாக உள்ளன. ரத்த ஓட்டம், ஜீரணம் இவற்றிற்கு இரும்புச் சத்தும், பற்கள், எலும்புகள்,

நரம்புகளின் வளர்ச்சிக்கும் செயல்பாட்டிற்கும் கால்சியம், மெக்னீசியம், பொட்டாசியம் ஆகிய தாதுப்புக்களும் மிகமிகத் தேவையாக உள்ளன. எல்லாக் கீரைகளிலும் முருங்கைக் காய், பேரீச்சம்பழம், காய்கறிகள், ஆகியவற்றிலும் இது அதிக மாக உள்ளது. மிருகங்களின் ஈரல், இரத்தம் ஆகியவற்றிலும் இது அதிகமாக உள்ளது.

## வைட்டமின்கள்

மேற்கண்ட சத்துப் பொருட்கள் மட்டுமன்றி வேறுசில சத்துக்கள் உயிர் வாழ்வதற்கு மிக அவசியமாக இருப்பதை அறிஞர்கள் கண்டு கூறியுள்ளார்கள். அவற்றை வைட்ட மின்கள் என்று பொதுவாக அழைக்கிறுர்கள் வைட்டமின் களில் பல வகைகள் உள்ளன. முக்கியமான ஐந்து வைட்ட மின்களைப் பார்ப்போம்.

**வைட்டமின் A;** இது 'CAROTENE' என்றழைக்கப் படும் இரசாயனச் சத்தாகும். இது மிக முக்கியமான சத்தா கும். இதை 'Basic source' என்று உடலியலார் அழைக்கின் றனர். உடலின் பொது நலன் இதனுல் காக்கப்படுகின்றது இது குறைந்தால் கண்பார்வை கெடும். இது பச்சையாக உள்ள இலைகள் அனைத்திலும் நிறையஉள்ளது. கேரட்கிழங்கு கீரைகள்,மாம்பழம்,பப்பாளிப் பழம், பேரீச்சம்பழம், போன்ற வற்றில் அதிகமாக உள்ளது. பொதுவாகக் காய்கறி பழங் களில் உள்ளது.

**வைட்டமின் B:** இதில் பல வகையுள்ளன. 6,12 பிரிவு கள் முக்கியமானவை. இதன் எல்லா வகைகளும் சேர்ந்த 'பீக்காம்ளக்கஸ்' மாத்திரைகள் இன்று கடைகளில் கிடைக் கின்றது. இவ்வைட்டமின் குறைவால் நரம்புத் தளர்ச்சி, குடல்புண், வாய்ப்புண்கள் வருகிறது. இது பெண் இன உறுப்புக்கள் (Sexual organs) வளரப் பெரிதும் உதவியாக உள்ளது. இது 'ஆதாழை' என்ற ஒருவகைச் செடியின் பாலில் இவ்வைட்டமின் அதிகமாக உள்ளது இன்றும் வாய்ப் புண் வந்தவர்கள் ஆதாழம் பாலை வாயில் தடவியும், கொப்ப

ளித்தும் புண்ணைப் போக்கிக் கொள்ளுவதைப் பார்க்கலாம். பால்,காய்கறி,பழங்களில் இவ்வைட்டமின் அதிகமாகஉள்ளது.

**வைட்டமின் C;** இதுஒருவகையான அமிலச்சத்து ஆகும் இது உடலுக்கு வலுவை அளிக்கிறது இது பொதுவாக உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை உண்டாக்குகிறது. வைட்டமின்'C' போதியஅளவுள்ள உடல் சூலையாநலஉடல் (Steady body) எனப்படும். இது குறைவாக இருந்தால் சீதோஷ்ணம் மாறும் பொழுது உடனே உடல் பாதிக்கப்பட்டு விடும் ஜலதோஷம், காய்ச்சல், இருமல் போன்றவை மாறி மாறி வரும். இது குறைவதால் பெரிபெரி என்ற நோயும் வரும். இதுவேக வைக்காத பச்சை காய்கறி, பழங்களில் உள்ளது. குறிப்பாக ஆரஞ்சு, எலுமிச்சை, நாரத்தை ஆகிய பழங்களில் அதிகமாக உள்ளது. உடலில் எதிர்ப்பு சக்தி குறைவாக உள்ளவர்கள் 'சி' வைட்டமின் மாத்திரைகளைச் சாப்பிடலாம்.

**வைட்டமின் D;** இது இயற்கையிலிருந்து கிடைக்கும் வைட்டமின். சூரிய ஒளியில் அதிகம் உள்ளது. இது குறைந்தால் எலும்புகள் பாதிக்கப்படும் ரிக்கட்ஸ் என்னும் கால் வளைவு நோய் ஏற்படும். காலை மாலை வெயிலில் இருந்து இதைப் பெற்றுக்கொள்ளலாம்.

**வைட்டமின் E;** இது மலட்டுத் தன்மையைப் போக்க உதவுவது. இது முளைத்து வருகிற மொச்சை போன்ற பயறுகளின் முளையிலும் முட்டையிலும் உள்ளது.

குழந்தைகளுக்கு ஆறு மாதத்திலிருந்து இரண்டு வயது வரையில் நல்லுணவு கொடுக்கவேண்டும் இந்தக் காலத்தில் தான் அவர்களுடைய மூளையும் கண்பார்வையும் பெருவளர்ச்சியடையக் கூடிய காலமாகும். இக்காலத்தில் நல்லுணவு கிடைக்காத குறையைப் பின் வாழ்நாளில் எவ்வளவு சாப்பிட்டாலும் நிறைவு செய்யவேமுடியாது. இந்த வயதில் குழந்தைகளுக்கு போதிய அளவு பால், பழங்கள், பருப்பு, நெய் கொடுத்து வளர்க்கவேண்டும். வெந்த முட்டையும் கொடுக்கலாம். சொட்டு மருந்து என்றழைக்கப்படும் பல

வைட்டமின்கள் கலந்த (Multi vitamin syrup) டானிக்கு கள் வாங்கிக் கொடுக்கலாம்.

4 வயதிலிருந்து 28 வயது வரை மற்றச் சத்துக்களோடு புரதச் சத்து அதிகமாக உணவில் சேர்த்துக் கொள்ளவேண் டும். 35 வயதிற்கு மேல் புரதம் அதிகம் வேண்டுவதில்லை. 45 வயதிற்கு மேல் உணவில் கட்டுப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ளுவது நல்லது. கொழுப்புச்சத்து சேருவதற்கு இடம் கொடுக்கக் கூடாது. நெய் எண்ணெய் போன்றவை சேர்ந்த உணவுப் பண்டங்களைக் குறைக்கவேண்டும். இனிப்புப் பண் டங்களை விலக்குவதும் நல்லது.

ஒரு நேர உணவில் பல வகைகள் இருப்பது நல்லதன்று. ஒரு நேர உணவு ஒரே தானிய உணவாக இருப்பதே நல்லது. பல வகைகளாக இருப்பின் ஜீரண உறுப்புகளுக்கு செறிப்ப தில் நேரமும் முயற்சியும் அதிகமாகும்

சுவைக்காகச் சாப்பிடுவதைவிட உடல் நலனுக்காகச் சாப்பிடுவதே நல்லது உலகின் வேறெந்த நாட்டினரையும் விட இந்தியர்கள் அதிலும் தமிழர்கள்தான் அதிகமான வகை உணவுகளை ஒரேநேரத்தில் கொள்ளுகிறார்கள். ஒரு விருந்தில் எலுமிச்சம்பழச் சாதம், தேங்காய்ச் சாதம், வெண்பொங்கல், சர்க்கரைப் பொங்கல் மேலும் சாம்பார், ரசம், மோர் சாதங் கள், கூட்டு, பொரியல், அவியல், பச்சடி, வடைகள், பாயசம், அப்பளம், ஸ்வீட், ஜாம், பழங்கள், ஊறுகாய் என்று கணக் கில்லாத வகைகளைவைத்து உண்ணுகிறோம். வேறெந்த நாட் டிலும் இவ்வாறு உணவு வகைகளைப் பெருக்கிக் கொள்வ தில்லை. அமெரிக்கா, இங்கிலாந்து, ரஷ்யா போன்றநாடுகளில் பெரிய விருந்தாக இருந்தால் கூட ரொட்டி, வெண்ணெய், மாமிசம், பானம் என்றளவில் அடக்கிக் கொள்ளுகிறார்கள். சுவை பெருக்கி உண்ணுவதால் எளிய உணர்வுகள் மிகும். உடல்வலு குறையும். ஆயுள் குறையும். தொப்பை பெருக் கும். மயக்கம் மிகும்.

மேலைநாடுகளில் காய்கறிகளையும் உணவையும் நம் நாட் டவர்களைப் போன்று இவ்வளவு வேக வைப்பதும் இல்லை.

காய்கறி கிழங்குகளை கூழாகும்படி வேக வைக்கும் பொழுது சத்துக்கள் வெப்பத்தால் குறைந்துவிடுகிறது. அதிலும் வெந்த காய்கறி,கீரை,மாமிசத்திலிருந்து நீரைவடிக்கும்மகாக்கொடிய பழக்கம் நம்மவர்களிடம் உண்டு அந்த நீரோடு வைட்டமின்கள் தாதுப்புக்கள் எல்லாவுமே ஓடி விடுகிறது. பின் சக்கையையுண்டு வலுக்குறைந்து நோயிற்கு இடங்கொடுத்து வாழுகிறோம்.

மசாலப் பித்து மற்றொன்று வத்தல்,மிளகு,கொத்தமல்லி, சீரகம், கடுகு, வெந்தயம்,புளி இவற்றில் எந்தச்சத்தும் கிடையாது. பழக்கத்திற்கு அடிமையாக இதைக்கட்டி அழுகிறோம். இவற்றைக் குறைத்துக் கொள்ளுவது நல்லது.

நாம் உண்ணும் உணவு வகைகள் நம்முடைய உடல் வளத்திற்கு மட்டுமல்லாது ஆயுள், அறிவு, நிறம், உணர்வுகளுக்கும் அடிப்படையாக உள்ளன. பொதுவாக பால்,நெய், காய்கறிகள்,பழங்கள், கீரைகள் மனிதனின் நல்ல நிறத்திற்கும் நீண்ட ஆயுளுக்கும் திடமான சிந்தனைக்கும் உதவிசெய்கிறது.

மலச்சிக்கலின்றி உடலைப் பார்த்துக்கொள்ள கீரையை உணவில் அதிகம் சேர்க்கவேண்டும். மலச்சிக்கல் வந்துவிட்டால் பச்சை வெள்ளரிக்காயை அதிகமாகத் தின்பதால் குறையும். பல்லாரி வெங்காயத்தை நறுக்கி மோரில்போட்டு உணவோடு உண்பதால் நல்ல பயனைத் தரும். படுக்கைக்கு போகுமுன் நாட்டு வாழைப்பழம் தின்று நிறைய நீர் பருகுவதும் பலனளிக்கும்.

'தமிழர்கள் உணர்ச்சி வயப்பட்டவர்களாக இருப்பதால் சமுதாய வாழ்வுப் போட்டிகளில் பல துறைகளில் பின்தங்கியுள்ளார்கள். அதற்குக்காரணம் அவர்கள் உண்ணுகிற மெல்லிய அரிசி உணவும் அவர்கள் படிக்கின்ற உணர்வுமிக்க இலக்கியங்களுமே காரணம். இக்குறையை நீக்க அரிசி உணவைக் குறைத்து கோதுமை, சோளம் போன்ற உணவுகளை உண்ண முன்வர வேண்டும்' என்று டாக்டர் மு. வ. அவர்கள் கூறுகிறார்கள்.[2]

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

# அலங்கார நாயகன் 21

திருமதி ஆர். பார்வதிஅம்மாள் அவர்கள்,
தமிழாசிரியை, நாமக்கல்.

---

## இருவகைப் பொருட்கள்

உலகியலும் அருளியலும் சில சமயங்களில் நேர்மாறாகத் தோன்றும்; மிக ஆடம்பரமாக உடையணியும் செல்வனை உலகியலில் மதிக்கிறார்கள். வீதியில் ஓடு ஏந்திக் கோவணம் கட்டிக் கொண்டு போகும் சிலரை ஞானிகள் என்கிறோம். அருளியலில் அவர்களுக்குத்தான் மதிப்பு உண்டு. இறைவனே கபாலியாகத் தோற்றம் அளிக்கிறான். உலகத்து செல்வ நிலை வங்கியில் போடுவது அருளியலிலே வறிஞர்களாகிய வங்கி யிலே போடச் சொல்கிறார் அருணகிரியார்.

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

காய்கறிகளை வாங்கி இரண்டு மூன்று நாட்கள் வைத்துப் பின்சமைப்பது என்ற மூடப்பழக்கம் நம் சகோதரியர்களிடம் அதிகமாக உள்ளது. இவற்றில் சூரிய வெளிச்சத்தில் தயாரித்த பசுங்கனிச்சத்து நீங்கிவிடுகிறது. எனவே ஏ, பி, சி வைட்டமின் சத்துக்கள் நீங்கிவிடுகின்றன. புதிய காய்கறிகளாகவே சமைத்து உண்ணவேண்டும்.

அளவுக்கு மீறி உண்ணுவது விரைவாக மரணத்தை நோக்கி ஓடுவதாகும். அளவான உணவு உண்ணவேண்டும். ஒருநாளைக்கு மூன்றுநேரம் உணவு கொள்ளுவதே பொருத்தமானது பொதுவாக எண்ணெய் வகைகள், மசாலாப்பொருட்கள் உடல் நலத்திற்கு தேவையில்லை. கீரை வகைகள், பச்சைக் காய்கறிகள், எலுமிச்சம்பழம், வாழைப்பழம், பேரீச்சம் பழம், முட்டை, பால் போன்றவை உயர்மானுடத்திற்குத் தேவையான உடல் நலனுக்கு பேருதவு புரியும்.

---

1. மகாத்துமா காந்தி — ஆரோக்கியத்தின் திறவுகோல் பக்கம் 27.
2. டாக்டர் மு. வ. "தம்பிக்கு"

"கெடுவாய் மனனே கதிகேள் கரவாது
இடுவாய் வடிவேல் இறைதாள் நினைவாய்
சுடுவாய் நெடுவேதனை தூள்படவே
விடுவாய் விடுவாய் வினையாவை யுமே"

அனுபூதி என்றார். வேல் என்பது ஞானம். ஞானம் கூர்மை யுடையது ஆதும், இதனைப் புலப்படுத்தவே மணிவாசகர்,

"கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே, நுணுக்கரிய நுண்ணுணர்வே"

என்றார் அன்றியும் ஞானம் ஒளியுடையது ஆதும், அறியாமை யாகிய இருளை நீக்கும் தன்மையுடையது இதனை உணர்த்தவே "வையிற் கதிர்" என்று வேலைச் சிறப்பித்தார். வடிவேல் என்றது ஏனைய வேல்களைப் போல் உலைக்களத்தில் காய்ச்சி வடித்ததன்று. பாச ஞான, பசு ஞானங்களினின்றும் வடித் தெடுத்த பதி ஞானம் என்பதனைப் புலப்படுத்தும்.

தர்மம் செய்வோருக்குச் செருக்கு உண்டாவதுண்டு நல்ல காரியங்கள் செய்பவர்கள் கர்வம் அடைவார்கள். தவம் செய்வோருக்கும் அகங்காரம் வந்துவிடுகிறது. மனிதவாழ்வின் கடைசியில் நினைவு, இந்திரியம், ஆசை முதலியன மடிந்து போகும். ஆனல் நான் என்ற உணர்ச்சி இறுதி வரை போ காது, எதைச் செய்தாலும் நான் செய்தேன் என்ற நினைவு வரும்.

"யான் எனது என்ற செறுக்கறுப்பான், வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்"

எனப் பொது மறையாம் திருக்குறள் கூறுகிறது.

ஒரு பொருளை ஒருவனுக்குத் தருமம் செய்யும் போது நான் தருகிறேன் என்ற எண்ணம் இருத்தலாகாது, அவ்வாறு இருப்பின் அது இராஜஸ தருமம், அவ்வாறின்றி அத்துவகுணத் துடன் தருமம் செய்யினும் அத்தருமத்தினல் வரும் புண்ணி யத்தை அனுபவிக்க மீண்டும் பிறக்கவே நேர்கின்றது நமக்கு அருள்பாலிக்க வேண்டும் என்ற பெருங் கருணையுடன் இறைவன் சிலரிடம் மிகுதியான பொருளைக் கொடுத்து இருக் கிறான். அருளைப் பெறுவதற்குத் துணையான பொருளை நம்

மிடம் கொடுத்திருக்கிருன் என்று உணர்ந்தால் அவனைவாழ்த்த வேண்டாமா? ஆகவே ' வையிற் கதிர்வடி வேலோனைவாழ்த்தி வறிஞர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று அருணகிரியார் கூறுகிருர் இப்பொருள் குமரக் கடவுள் கொடுத்தது என்றும் அவனுடைய பொருளை அவனடியாருக்குத் தருகின்றேன் என்றும் எண்ணிக் கொடுத்து அறத்தினல் வரும் புண்ணியத் தையும் குகார்ப்பணம் செய்ய வேண்டும் அதனுல் ஆகாமியம் விளையாது.

தருமம் ஏழைகட்கே செய்தல் வேண்டும். அதை எப் பொழுதும் செய்ய வேண்டும். ஏழைகட்கு ஈவதையே ஈகை என்ருர் திருவள்ளுவர்.

''வறியார்க்கொன் றீவதே யீகைமற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து''

தருமம் செய்வதற்கு இயல்பில்லாதவர்கள் இயன்றவரைநோய் யிற் பாதியனவாயினும் ஏழைகட்குப் பகிர்ந்துக் கொடுத்தல் வேண்டும். 'நற்சிந்தையும், நற்சொல்லும், நற்செயலும்' என்று மூவகைப்பட்ட அறத்தை முறையே மனத்தாலும், வாக்காலும் காயத்தாலும் இயலும் திறத்தால் ஓயாது செய்ய வேண்டும்.

''ஒல்லும் வகையா னறவினை யோவாதே
சொல்லும்வா யெல்லாம் செயல்''

எனக் கூறுகிறது திருக்குறள், இக்கருத்தையே அருணகிரி யாரும் திருச்செந்தூர் திருப்புகழில் தெரிவிக்கிருர்.

''எனது பொருளெனுமருளை யின்றிக் குன்றம்
பிளவளவு, திணையளவு, பங்கிட்டு உண்கைக்,
கிளையமுது வசைதவிர இன்றைக் கன்றைக்கென நாடாதிடுக கடிது''

''அழுக்காறு அவாவெகுளி இன்னச்சொல் நான்கும்
இழுக்கா இயன்ற தறம்''

என்ருர் வள்ளுவர், அவன் தர்மம் பண்ணிப் புகழ் பெறு கிருனே. நாம் குறைந்து விட்டோமா? அவனுக்கு மேல் கொடுக்க வேண்டும் என்று எண்ணிக் கொடுப்பது பொருமை யின் விளைவு அது அறம் ஆகாது இது செய்தால் எனக்குப் புகழ் கிடைக்கும் பிறர் நமக்கு உதவி செய்வார்கள் என்று நினைப்பது அவா. அதுவும் தவறு, எப்போதும் தொந்தரவு

பண்ணிக் கொண்டே இருக்கிறன் என்று சிடுசிடுவென்ற முகத்தோடு இதோடுதொலைந்துபோ என்பது இன்னச்சொல், இந்நான்கும் இல்லாமல் செய்யும் தருமம் உயர்ந்தது என்பது வள்ளுவர் வாக்கு.

நமக்கு மிகவும் உரித்தென்று கருதப்படுகின்ற உடம்பின் நிழல் வெயிலுக்கு ஒதுங்கத் தனக்கு உதவாதவாறு போல் நாம் அரிதில் தேடிய கைப் பொருள் ஒன்றும் இறுதி நாளில் மரண யாத்திரை செல்லும் போது உடன் வராது. நாம் செய்த அறத்திலாய புண்ணியங்களே உடன்வந்து உதவும், "எங்காயினும் வரும் ஏற்பவர்க் கிட்டது" என்பது கந்தர் அலங்காரம்.

"அன்றறிவா மென்ன தறம் செய்க மற்றது
பொன்னுங்கால் பொன்றுத் துணை" — திருக்குறள்.

"எரியெனக் கெனும் புழுவோ எனக்கெனும் இந்த மண்ணும்
கரிஎனக்கெனும் பருந்தோ எனக்கெனும் தான்புசிக்க
நரியெனக்கெனும் புன்நாய் எனக்கெனும் இந்நாறுடலை
பிரியமுடன் வளர்த்தேன் இதனலென்ன போது எனக்கே"
"கையிற் பொருளு முதவாது காணும் கடைவழிக்கே"

பொருளும் என்ற எச்ச உம்மையால் மனைவி, மைந்தர், மாடு வீடு முதலி... யாவும் நம்முடன் மறுமைக்குத் தொடர்ந்து வாரா, "பற்றித் தொட நம் இருவினை புண்ணிய பாவமுமே"

"வாதுற்ற திண்புய ரண்ணுமலையார் மலர்ப்பதத்தைப்
போதுற் றெப்போதும் புகலு நெஞ்சே இந்த பூதலத்தில்
தீதுற்ற செல்வமென் தேடிப் புதைத்த திரவியமென்
காதற்ற ஊசியும் வாராது காணும் கடைவழிக்கே"

என்ற திருவெண்காட்டடிகள் வாக்கையும் சிந்திக்கவும், கடைவழி என்பது இறுதியில் உயிர் உடம்பை விட்டுச் செல்லும் மரண யாத்திரையைக் குறிக்கும்.

"ஓயாமல் பொய் சொல்வர், நல்லோரை
நிந்திப்பர் உற்றுப் பெற்ற
தாயாரை வைவர் சதியாயிரம் செய்வர்.
சாத்திரங்கள் ஆயார், பிறர்க்கு

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

ஸ்ரீ ஆதிசங்கரரின்

# ஸ்ரீ சுப்ரமண்ய புஜங்கம்

திரு. வித்யாதீர்த்ததாஸன் அவர்கள்,
புதுக்கோட்டை (கிழக்கு)
(தமிழாக்கம் கோவை ஸ்ரீ நடேசக் கவுண்டர்)

(மலர் 27 இதழ் 3 191-ம் பக்கத் தொடர்ச்சி)

## 12. பிழை பொறுப்பாய் போற்றி.

To err is human; And, to forgive is divine, குற்றமிழைத்தல் இயற்கை; மன்னிப்பது தெய்வீகம் என்பது வழக்கு. அதிலும் குழந்தைகள் செய்யும் குற்றத்தைத் தாய் தந்தையர் மன்னிப்பது இயல்பு. தெய்வம் தாய்தந்தை போன்றது. அதனுலேயே,

குற்றம் புரிதல் எனக்கியல்பே
குணமாகக் கொள்ளல் உனக்கியல்பே. என்றும்

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

உபகாரம் செய்யார் தமை,
அண்டினர்க் கொன்றும்
ஈயாரிருந்தென்ன போயென்ன காண்
கச்சி யேகம் பனே''

தன்னிடம் உள்ள பொருளை இறைவனுடையது என்று எண்ணி ஏழைகளுக்குக் கொடுப்பது அகங்காரம், மமகாரம் இரண்டையும் ஒழிப்பதற்கு வழி. பற்றையும், ஆசையையும் மாற்றத் தியாகமே மாற்று நம்மிடம் உள்ள பொருள் நம்முடையது அல்ல என்று நினைத்து இறைவனுடையதாக எண்ணி உரியவர்க்குக் கொடுக்க வேண்டும்

''வையிற் கதிர்வடி வேலோனை
வாழ்த்தி வறிஞர்க்கு என்றும்
நொய்யிற் பிளவள வேனும்
பகிர்மின்கள் நுங்கட்கு இங்கண்
வெயிற்கு ஒதுங்க உதவா
உடம்பின் வெறுநிழல் போல்
கையிற் பொருளும் உதவாது
காணும் கடை வழிக்கே''

[தொடரும்]

"இறைவனே! நான் செய்யும் குற்றம் அனேகம், ஆலகால விஷத்தையே அமுதம் போன்று விழுங்கிய நீ என் குற்றத்தைக் குணமாகக் கொள்ளவேணும்".

அடியனேன் செய்யுங் குற்றம்
அன்றைக்கன்று அனந்தமாகும்
கொடிய நஞ்சு அமுதாக் கொண்டாய்!
குற்றமும் குணமாக் கொள்வாய்!

என்பது திருவிளையாடல் வாக்கு. "நான் குற்றம் செய்தேன் செய்கிறேன், செய்வேன். நீ ஏற்றுக்கொள்வது உன்இயற்கை. என்னை உலகில் ஏங்கவிட்டால் என்ன செய்வேன்? உன்னைத் தவிர எனக்கு கதியார்?

தீதுசெய்தனன் செய்கின்றேன் செய்வேன்
தீயனேன் கொடுந்தீக் குணத்தியல்பே
ஏது செய்தனேனும் என்றனை ஏன்று கொள்
எம் இறைவ! நின் இயல்பே
ஈது செய்தனை என்னை விட்டுலகில்
இடர் கொண்டேங்கென இயம்பிடிலடியேன்
ஓது செய்வதொன்று: என்னுயிர்த் துணையே!
உனையலால் எனையுடையவர் எவரே.   அருட்பா

என்பர் அருட்பிரகாச வள்ளலார்.

அம்முறையில் தன்குற்றங்களை மன்னிக்குமாறு வேண்டுகிறார் ஸ்ரீ ஜகத்குரு.

மகார் செய்த பிழைபெற்ற பேர் மன்னி யாரோ?
மகனல்லனோயான்? விண்மண் பெற்றதந்தாய்!
மகாதேவ செந்தூரில் வாழ் கந்தவேளே!
மன்னிக்க யான் செய்த புன்மைக் குழாமே.   30

பிறகு முருகனது மயில்வேல் வாகனமான ஆடு, சேவல், அவனருகில் உள்ள அலைவீசும் கடல் அவனது திருவடிகளையும் போற்றி வணங்குகின்றார் நம: என்பது நமஸ்காரம்என்று பொருள் அதையே "போற்றி" எனத் தமிழில் பொருள் காண்கின்றனர்.

மயில் போற்றி வேல் போற்றி மறியாடு போற்றி
வன்காற் படைச் சேவலும் போற்றி! நந்தூர்
உயர்வெண்டிரைச் சிந்துவும் போற்றி! முருகோன்
உபயபதம் போற்றி உறை செந்தில் போற்றி.   31

"இன்பவடிவான இறைவா! ஒளிமயமானவனே! எங்கும் பரவிய புகழுடையோய்! குறைவிலா இன்பமயமானவனே! கருணைக்கடலே! எல்லோருக்கு உறவானவனே! யாவரும் இன்பந்தருவோனே! உனக்கு வெற்றி உண்டாகுக!" என மங்களம் பாடுகிறார்.

ஜய இன்ப வடிவா! ஜயச்சோதி ரூபா!
ஜயப்பாவு புகழோய்! ஜயத்தா விலின்போய்!
ஜய இன்ப சிந்து! ஜயச் சர்வபந்து
ஜய இன்பவள்ளால்! ஜயச் செந்தில் வாழ்வே. 32

இவ்வாறு நூலை முடித்தருளிய ஸ்ரீ ஆதிசங்கர பகவத் பாதாள் நூற் பயன் கூறுகின்றார். முருகனின் திருவடிகளில் சூட்டப்பட்டுள்ள மணமுள்ள இப்பாமாலையை ஆர்வத்துடன் கேட்போர் மனைவி மக்களுடன் இகவாழ்வில் இன்பம் பெற்று இன்பமயமான மோட்சவீடு பெறுவார் என வாழ்த்தி முடிக்கிறார்.

திருச்செந்தில் நாதன் பதத்தே மணக்கும்
திருப்பாட்டிக்கிவைக் கள்வம் வைத்தே படிப்போர்
திருப்பெண்டு மக்கட் சிறப்பின்ப வாழ்வும்
சிறக்கத் திகழ்ந்தின்ப வீடெய்து வாரே. 32

எல்லாவிதமான நன்மைகளையும் அளிக்கும் ஸ்ரீ சுப்பிரமண்ய புஜங்கம் பாடிய ஸ்ரீஆதிசங்கரரை வணங்குகிறார் கவியரசு ஸ்ரீ நடேசகவுண்டர்

இன்னல் தரும் பிறப்பிறப் பிலிடைவிடா துழலுயிர்
கட் கிரங்கிப் பூமேல்
பொன்னவிரும் காலடியிற்போந்து முழுதுணர்
ஞானப்புலவனுகி
மன்னு சிவனே யிவனென்றுல கெலா
மதித்த மறையின் அந்தம்
துன்னிய சூத்திரமுறை செய் வ்சங்கராசாரியன்
தாள் தொழுதுய்வோமே.

(தமிழாக்கம்:– ஸ்ரீ நடேசக்கவுண்டர்)

ஸ்ரீ ஆதி சங்கராசாரியாள் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ சுப்ரமண்ய புஜங்கத்தைத் தமிழர்கள் அறிந்து இன்புறுமாறு அதே சந்தத்திலேயே தமிழில் பாடியருளிய கோவை கவியரசு மகாவித்வான் ஸ்ரீநடேசக்கவுண்டர் திருநாமம் என்றும் வாழ்க.

ஸ்ரீ அபிநவ வித்தியாதீர்த்த குருதிருவடிகளே சரணம்
ஸ்ரீ ஷண்முகநாதன் துணை
வாழ்க குமரகுருபரன்

# ஸ்ரீ தேவிகருமாரி அஷ்டோத்திரமாலை

திரு. வண்ணை: ஆ. ஜானகிராமன் அவர்கள்,

மங்கள நாயகி மலைமகள் பார்வதி மாதவன் சோதரியே
குங்குமம் நெற்றியில் குழைந்திட மஞ்சளும் கொஞ்சிடும் ஈஸ்வரியே
எங்குலம் தழைத்திட இனியது நடந்திட எழுந்திரு தேவியளே
விரைவிரை துயர்துடை விவேகநல் வெற்றி வரமருள் கருமாரி

மன்னுயிர் காத்திடும் மரகத வல்லிநின் மாணடிப் போற்றுகின்றேன்
என்னுயிர் தெய்வமே எழுந்தருள் இக்கணம் என்குறை தூள்படவே
வன்பிணி சூழ்பகை வதைத்திடும் சூலமும் வாளினைக் கொண்டவளே
விரைவிரை துயர்துடை விவேகநல் வெற்றிவரமருள் கருமாரி

அணிமுடி மீதொரு அரவமும் ஆடிட அன்புரு வானவளே
மணிகுலத் தண்டையும் மகிழொளி ஆடையுப் மாண்புற பூண்டவளே
துணிவுடன் துட்டரை துவண்டிட ஓட்டிடும் தூய்மையுள் துர்க்கையளே
விரைவிரை துயர்துடை விவேகநல் வெற்றி வரமருள் கருமாரி

பொன்னொளி வீசி புவிதனை காத்துப் புன்னகை செய்பவளே
முன்னவன் வேழ முகத்தவன் அன்னை மோகன சுந்தரியே
தன்னிக ரில்லாச் சரவண னுக்குத் தனிவேல் தந்தவளே
விரைவிரை துயர்துடை விவேகநல் வெற்றி வரமருள் கருமாரி

தாயருள் பெற்றவர் தவப்பயன் பெற்றனர் தாரணி வாழ்ந்திடவே
சேயிவன் செய் பிழை சிறுமையும் போக்கியே செந்நெறி காட்டியோய்
தூயவள் நின்புகழ் துளங்கிடப் பாரினில் சுந்தர ஜோதியளே
விரைவிரை துயர்துடை விவேகநல் வெற்றி வரமருள் கருமாரி

ஊழ்வினை ஆணவம் உருகுலைந் தோடிட ஒப்பிலாச் சக்தியளே
தாழ்விலா ஞானமும் தழைத்திடும் செல்வமும் தந்தருள் சங்கரியே
வாழ்வினில் இன்பமே வகையுடன் நல்கிடும் வாஞ்சையுள் அம்பிகையே
விரைவிரை துயர்துடை விவேகநல் வெற்றி வரமருள் கருமாரி

மந்திரம் தந்திரம் மருட்டிடும் பேய்களும் மாயபில் லிசூன்யம்
அந்தர மின்னலும் அதிரிடி யோசையும் அஞ்சியே ஓடிடவே
முந்தைசெய் வினைகளும் முனியுறு பாவமும் மூர்க்கமும் சாய்வதற்கு
விரைவிரை துயர்துடை விவேகநல் வெற்றி வரமருள் கருமாரி

இறை இறை அன்னையே எழுந்திரு என்றன்முன் ஓம்பரா சக்தி
நிறை நிறை காளியே நெடுவரை தேவியே ஓம்பரா சக்தி
உரை உரை நன்மொழி உலகமும் உய்ந்திட ஓம் பராசக்தி
விரை விரை துயர்துடை விவேகநல் வெற்றி வரமருள் கருமாரி

முற்றும்

# குறிப்பு அறிதல்

திரு. அ. சுவாமிநாதன் அவர்கள்,
துணை அஞ்சலகத் தலைவர்,
97, செட்டியார் தெரு, பாண்டிச்சேரி 605001.

வான்புகழ் வள்ளுவர் தமது திருமறையில் "குறிப்பு அறிதல்" என்று இரண்டு அதிகாரங்களை இரண்டு வேறுபட்ட பால்களில் அமைத்துள்ளார். ஒன்று பொருளில்; மற்றொன்று காமத்தில்; யாதொன்றிற்கும் இங்ஙனம் இயைபு ஏற்படவில்லை குறிப்பு அறிதல் என்பது எல்லோருக்குமே வேண்டப்படுவ தொன்ருகும், அரசவையில் சார்ந்தோர்க்கு மிகமிக அவசிய மாதலால். அங்கவியலில் "குறிப்பு அறிதல்" என்று முதன்மை யாகச் சேர்த்துள்ளார். தலைமைபற்றிச் சொல்லியதால் குறிப்பு அறிதல் இலக்கணம் மற்ற அனைவருக்கும் வேண்டுவது என்ப தும் எளிதில் புலப்படும். தொடக்கத்தில் வரும் "குறிப்பு அறிதல்" அதிகாரத்தின் சாரத்தைப் பார்த்துவிட்டு, அடுத்து காமத்துப்பாலில் வரும் "குறிப்பு அறிதல்" அதிகாரத்தின் சாரமும் பார்த்து இடைநிற்கும் சிறப்பியல்களைத் தெரிந்து கொள்ளுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

எதையும் கூறுமுன்னரே குறிப்பறிய வல்லான், மாருரூர் வையத்திற்கு அணி போலக் கருதப்படுவான். மனத்திலுள் ளதை ஆண்டவன் ஒருவனே அறியக் கூடியவன். உள்ளத் தைக் கடந்தும் நிற்பவன். அங்ஙனமிருக்கவும், மனிதரிலும் சிலர் நுண்மையாகப் பிறரின் மனத்தின்கண் நிகழ்வதனை ஐயப் படாது ஒரு தலையாக உணரும் சக்தியைப் பெற்றுள்ளனர். அவர்கள், தெய்வத்துடன் ஒப்பிடத்தக்கவர்களே. தமது குறிப் பால், பிறரின் குறிப்பும் நேரவல்லார்கள். பார்வைக்கு ஒப்ப இருப்பினும், அவர்களது அறிவும், பிறப்பும் மேன்மை பட்டதே. மற்றவர்களின் மனக் குறிப்பைக் கண்ணால்கண்டும் உணர முடியாதவர்கள். எழுத்தைக் கண்டும் படிக்க முடியா மலுள்ள அறிவீனர்களை ஒப்பார்கள். குறிப்பறிய ஒன்றும்

முயற்சி வேண்டாம். நெஞ்சத்து மிக்கதனை அவனவன் முகம், தானே முன்னின்று அடுத்தது காட்டும் பளிங்கு போல் காட்டி விடும். இஃது இயற்கை; மாற்றவும் முடியாது; மறைக்கவும் ஒண்ணாது. ஒருவனின் உவத்தலையும், காய்தலையும் கூடுதல், குறைதல் இன்றி முன்வந்து வைத்துவிடும். முகத்தைக் காட்டிலும் அறிவு மிக்கதும் உலகில் உண்டோ? இல்லை. அகம்நோக்கி உற்றது உணர வல்லாருக்கு, முகம் நோக்கி நிற்கவே அமையும் வேறு உதவி தேவையில்லை. கண்ணின் வகைமையை உணர வல்லாருக்கு, அனைத்துச் செய்திகளும் கண்ணாலேயே பெறப் படும். நுண்ணிய அறிவுடையாரின் அளவுகோல் எதுவென்றால் அவரது கண்களே தவிர வேறு எதுவுமில்லை.

மேற்கூறியக் கருத்துக்கள் ''குறிப்பு அறிதல்'' பற்றி அனைத்துமடங்க விளக்கக் காணலாம். இவ்வளவு சிறப்பினும் ''குறிப்பு அறிதல்'' காமத்துப்பாலிலும் இடம் பெற்றமையின் காரணம்தான் என்னே! அகம் அறியும் ஆற்றல்தான் இரண்டு இடங்களிலும் கூறப்படுகின்றது. காதலர்களுக்கிடையில் ''குறிப்பு அறிதல்'' என்பது சாதாரண இலக்கணத்திற்கு முற்றிலும் அப்பாற்பட்டது. தலைவனும், தலைவியும் பேசும் கண் மொழிகள் பக்கத்திலேயே உள்ளவராலும் உணரக்கூடாத அளவுக்கு அவ்வளவு அழுத்தமான சக்தி கொண்டுள்ளன. அங்கவியலில் வரும் ''குறிப்பு அறிதல்'' நடுத்தரத்தில் உள்ளவர்க்குங்கூட சமயத்தில் புரியக் கூடியது.

காமத்துப்பாலில், களவு இயலில் ''குறிப்பு அறிதல்'' வைத்துள்ள நுட்பம் காண்க. கற்பியலில் தேவையின்மையும் தெளிக. தோழி என்பாள் தலைமகன், தலைமகள் இவர்களிடை காதல் சம்பந்தமாய் ஈடுபட வேண்டியதால், அவளுக்கும் குறிப்பு அறிதலில் பங்கு உண்டாகிறது.

**தலைமகனின் கூற்றுக்கள்:**

''இவளது மையுண்ட கண்கள் இருநோக்குடன் உள்ளன ஒன்று காமநோக்கு, மற்றொன்று காமநோய் நீக்கும் மருந்து நோக்கு, நான் நோக்கிய போது நாணிஇறைஞ்சியும் நோக்கா வழி உற்றுநோக்கியும் வருதலால், அவளது களவு கொள்ளும்

சிறு நோக்கம் மெய்யுறு புணர்ச்சியின் ஒத்த பாதியளவு அல்ல, அதனினும் மிக்கதே ஆகும். நோக்கினுலும், நாணினுலும் காதற் பயிரை வளர்க்கிருள். நாணத்தால் யான் நோக்குங்கால் நிலன் நோக்கியும், நான் நோக்காத போழ்து தான் நோக்கி மெல்ல நகுகிருள். ஒரே குத்திட்டப் பார்வையாகச் செலுத்தாமல். ஒரு கண்ணைச் சிறக்கணித்தாள் போல நோக்கிப் பின் தன்னுள்ளே மகிழ்கிருள், சில சமயங்களில் தடை மொழியும், கட்டுப்பாடும் விதிக்கக் காண்கிறேன். அங்கு அன்பு ஊற்று எடுத்து பிற்பயன் விளையக் காண்கிறேன். என்னை அவள் பார்க்கும் பார்வையும், போக்கும் மற்றவர்கட்குப் புரியவே புரியாது. காரணம் அவளது பார்வை வெறுப்பது போலவும், சொற்கள் திட்டுவது போலவும், எதிரிட்டப் பகையைப்போல வும் தென்படும் அதனல்,

''என் நிலைமைக்கு இரங்கி மெல்ல உள்ளே மகிழ்ச்சி அடைகிருள் என்பது எனக்கு மட்டுந்தான் தெரியும்''

தோழி கூற்றுக்கள் சில:

''முன்பின் அறியாதவர் போல, ஒருவரையொருவர் பொது நோக்கான் நோக்குதல், பின் யாருக்குத்தான் வரும்? அம்மம்ம! இடையில் நின்று நான் என்ன சொல்லிச் செய்ய வேண்டும்? எதுவுமேவேண்டாம். அதோ, அவர்களது கண்கள் பேசும் பேச்சுக்களில் எவ்வளவோ செய்திகள் பரிமாற்றம் கொள்கின்றனவே''

தமிழ் இலக்கணமாதலால், நுட்பத்துடன் தலைமகனுக்கும். தோழிக்கும் ''குறிப்பு அறிதல்'' கூற்றுக்களை ஒதுக்கியுள்ளார். நாணத்தின் இருப்பிடம் தலைமகள் என்பதை நினைவு கொண்டு, அவள் கூற்ருகக் குறள் ''குறிப்பு அறிதலில்''இடம் பெறவில்லை என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

**சுற்றுரை:**

பொய்யா மொழிப் புலவர் ''குறிப்பு அறிதல்'' என்ற தலைப்பில் வேறு, வேறு அடிப்படையில் நின்று திட்ப, நுட்

பத்துடன் செயல்பட்டுள்ளார், இதை முதலில் அறிய வேண்டும்.

அங்கவியலில் ''குறிப்பு அறிதல்'' நாட்டிலுள்ள எல்லோருக்கும் இன்பமும், நன்மையும் பயப்ப எழுந்ததாகும். காமத்துக் ''குறிப்பு அறிதல்'' தனிப்பட்ட தலைவன், தலைவி தோழி இவர்களுக்குள்ளே எழுந்து தலைவன், தலைவி இவர்களிடையே இன்பமும், நன்மையும் பெருக உதவியாகிறது. இவ்வளவு சிக்கலானக் ''குறிப்பு அறிதல்'' சொல்லாமல் விடுபடக் கூடாது என்ற கருத்தில்தான் வள்ளுவர், காமத்துப்பாலில் அதுவும் களவியலில் மறைத்து வைத்துள்ளார், வெளிப்படையாய் நிற்கும் ''குறிப்பு அறிதலை'' பொருட்பாலில், அங்கவியலில் பொது வாழ்க்கைக்கு அவசியமானதொன்றுகக் கருதி நூலின் செம்பாகத்தில் பொதித்து உருவாக்கியுள்ளார் என்று கருத இடமுண்டாகிறது.

களவியலில் வரும் ''குறிப்பு அறிதல்'' வதுவை முடியு மட்டுமே நீடிக்கவல்லது. ஆகையால் அங்கவியலில் வரும் ''குறிப்பு அறிதலை''யே நிலையாய்க் கடைபிடிக்க வேண்டும் என்பது துணிவு.

# மூன்றும் திருமுறையின்
# முதற்பாடல்கள் — உரை

திரு. தா. ம. வெள்ளைவாரணம் அவர்கள்

121. திருப்பந்தணைநல்லூர் பண்: புறநீர்மை

இடறினர் கூற்றைப் பொடிசெய்தார் மதிலை
இவைசொல்லி உலகெழுந் தேத்தக்
கடறினர் ஆவர் காற்றுளார் ஆவர்
காதலித் துறைதரு கோயில்
கொடிறனர் யாதும் குறைவிலார் தாம்போய்க்
கோவணங் கொண்டுகூத் தாடும்
படிறனர் போலும் பந்தணை நல்லூர்
நின்றஎம் பசுபதி யாரே.

பொழிப்பு: பந்தணைநல்லூர் என்னும் தலத்தில் நிலைபெற்றுள்ள எமது பசுபதியார் என்பவர் 'கூற்றுவனை உதைத்தார்' என்றும், 'முப்புரத்தை எரித்துச் சாம்பலாக்கினர்' என்றும் இவற்றைச் சொல்லி உயர்ந்தோர் மிக்குத் துதிக்கும் படியாகக் காட்டில் உள்ளவரும் ஆவார். காற்றில் உள்ளவரும் ஆவார்; விரும்பித் தங்கி இருக்கும் கோயில் மேடையில் உள்ளவரும் ஆவார்; எதனாலும் குறைவில்லாதவரும் ஆவார்; தாமே சென்று கோவணத்தைத் தரித்துக் கொண்டு கூத்தாடும் வஞ்சகரும் ஆவார். (எப்படியும் இருப்பார்).

இடறல்–உதைத்துத் தள்ளுதல்; பொடி–சாம்பல்; மதில்–முப்புரம்; உலகு–உயர்ந்தோர்; கடறு-காடு; கொடிறு-மேடை; படிறு–வஞ்சகம்; போலும் என்பது அசை. பசுபதியார் என்பது பந்தணைநல்லூர் இறைவன் பெயர். இப்பதிகத்தைப் பாட வல்லவரைத் தொல்வினை சூழமாட்டா.

உ

சிவ சிவ

சிவாய நமவெனச் சித்தம் ஒருக்கி
அவாயம் அறவே அடிமைய தாக்கிச்
சிவாய சிவசிவ வென்றென்றே சிந்தை
அவாயங் கெடநிற்க ஆனந்த மாமே.